Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Thirumurugan Com Net திருமுருகன் கொம் நெற்
WESTERN UNION Money Transfer FedEx Express
Inland & I.D.D Calls, Internet-Browsing & E-mail, Fax, Photo Copy,Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,
259,K.K.S.Road Jaffna. Tel - 021 222 3958 Fax - 021 222 7836
E.mail thirumuruglan@lycosmall.com
46,Adiyapatham Road, thirunelvely,Jaffna. Tel - 021 222 7560 Fax - 021 222 7340

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 20 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 22 (04.01.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:96

## அமெரிக்கப் படைகள் தரையிறக்கம்!



கட்டுநாயக்க விமானநிலையத்தில் தரையிறங்கிய அமெரிக்கப் படையினர்.



சி - 130 ரக விமானத்தில் கொண்டுவரப்பட்ட பிளக்ஹொக் ஹெலி.

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு 1500 மரைன் உதவித் துருப்புக்களை அனுப்பும் திட்டத்தின் முதற்கட்டமாக 42 அமெரிக்கப் படையினர் நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கடந்த வார இறுதியில் கொழும்பு வந்த 12 அமெரிக்கப் படையினரின் சொத்து மதிப்பீடுகளின் அடிப்படையில் 1500 உதவித் துருப்புக்களை அனுப்ப அமெரிக்கா முடிவுசெய்துள்ளது.

இதையடுத்தே நேற்று 42 மரைன் படையினர் சி.130 போக்குவரத்து விமானம் மூலம் கட்டுநாயக்காவை வந்த்டைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் போர்க் கப்பலும் கொழும்பு வந்து சேர்ந்தது!

### பங்களாதேஷும் அனுப்புகிறது

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட இலங்கையில் உதவி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக பிரிட்டிஷ் போர்க்கப்பல் ஒன்று நேற்று கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்தது.

'எச்.எம்.எஸ். சதம்' என்ற இந்தப் போர்க்கப்பலில் உதவிப் பணிகளில் ஈடுபடவுள்ள கடற்படை மாலுமிகளுடன் இரண்டு இலகு ஹெலிகொப்டர்களும் வந்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின்படியே இந்தப் போர்க்கப்பலை பிரிட்டன் அனுப்பி வைத்ததாகத் தெரியவருகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு எத்தகைய உதவிகளை வழங்குவது என்பது தொடர்பாக ஆராய பிரிட்டிஷ் பாதுகாப்பு அதிகாரிகள் குழு கொழும்பு வந்து இரண்டு நாட்களின் பின்னர் இந்தப் போர்க்கப்பல் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளையடுத்து பங்களாதேஷ் அரசும் தனது கடற்படைக் கப்பல்களை இலங்கைக்கு அனுப்பவுள்ளது.

பி.எஸ்.எஸ்.துரக், பி.எஸ். எஸ். சங்கு ஆகிய கப்பல்களே இலங்கை மற்றும் மாலைதீவுக்கு அனுப்பப்படவுள்ளன. இந்த நடவடிக்கைக்கு 'சார்க் பந்தம்' எனப் பெயரிப்பட்டுள்ளது.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு போதிய நிவாரண உதவிகள் இல்லை!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(லண்டன்)

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட – விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அரசாங்கத்தின் நிவாரண உதவி சரிவர வந்துசேரவில்லை என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நிவாரண விநியோகம் அரசாங்கத்தின் பிரசாரமாக இருக்கின்றதே தவிர நடைபெறவில்லை. எனவே செயலணிக்குழுக்களை அமைத்து மக்களை பராமரிக்கும் பணியிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வுப் பணிகளைச் செய்வதோடு அனைத்துப் பணிகளையும் துரிதப்படுத்தியுள்ளோம்.ஆனால் அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்ததைத் தவிர எந்த வழிமுறைகளையும் ஏற்படுத்தவில்லை. விடுதலைப் புலிகளோடு வந்து இணைந்து மீட்புப் பணிகளையும் எமது மக்களின் மறுவாழ்வுப் பணிகளையும் முன்னெடுப்பதற்கு எந்தவிதமான நடைமுறை ஒழுங்கிற்கும் இன்னும் அரசாங்கம் வரவில்லை.

அந்த வகையில் எமக்கு பலத்த சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில் இலங்கை அரசாங்கம் பிரசாரத்தின் ஊடாக முழு உதவிகளையும் தன்னுடைய பகுதிக்குத் திருப்புகின்ற முயற்சியை மேற்கொள்கின்றதே தவிர –

(12 ஆம் பக்கம் பார்க்க)

## டிக்ஸிற் காலமானார்!



(புதுடெல்கி)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான ஜே.என்.டிக்ஸிற் நேற்றுக் காலை மாரடைப்பால் மரணமானார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### யுனிசெவ் நிறைவேற்றுப் பணிப்பாளர்

## முல்லைத்தீவுப் பிரதேசத்தில் நிலைமையை அவதானிப்பு!



(கிளிநொச்சி)

யுனிசெவ்வின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கறோல் பெலாமி மற்றும் அவரது குழுவினர் நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்து கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுக் கரையோரப் பிரதேசங்களைப் பார்வையிட்டதுடன், கடல் அலையால் அடித்துச்செல்லப்பட்டு காப்பாற்றப்பட்ட செந்தளிர் சிறுவர் இல்லச் சிறுவர்கள் மற்றும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கில் அனைத்துப் போராளிகளையும்

## உதவிப் பணிகளில் ஈடுபடுமாறு தலைவர் பிரபாகரன் உத்தரவு!

(அம்பாறை)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் மீட்புப் பணிகள் மற்றும் கட்டட இடிபாடுகளை அகற்றல், நிவாரணப் பணிகள் ஆகியவற்றில் அனைத்துப் போராளிகளையும் ஈடுபடுத்துமாறு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் உத்தரவிட்டுள்ளதாக மட்டு - அம்பாறை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

கடந்த நான்கு நாட்களாக அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று நிவாரணப் பணிகளையும், பாதிப்புகளையும் பார்வையிட்டு வரும் அவர் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது -

இந்தப் பணிக்காக வடக்கிலிருந்து ஏராளமான போராளிகள் தற்போது வருகை தந்துள்ளனர்.

தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பேதமின்றி மீட்புப்பணிகளிலும் நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளோம்.

முஸ்லிம்கள் வாழும் காத்தான்குடியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தால் நிர்க்கதியான எம் மக்களுக்கு உதவுங்கள். நமது ஈழநாடு ஆரம்பித்துள்ள நிவாரண நிதிக்கு வாரி வழங்குங்கள். உங்கள் நிதியுதவிகளை வர்த்தக வங்கி (யாழ்ப்பாணம்) கணக்கு இல. 8060025404 அல்லது மக்கள் வங்கி (காங்கேசன்துறை கிளை) கணக்கு இல. 15897 க்கு அனுப்புங்கள்.**

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கான புதிய சம்பள அதிகரிப்பு விபரம்!

அதிபர்கள், ஆசிரியர்களுக்கான புதிய சம்பள அளவுத் திட்டமும், சம்பள அதிகரிப்பும், அரசாங்க பொதுநிர்வாக அமைச்சின் 09/2004 இலக்க 27-12-2004 ஆம் திகதிய சுற்றறிக்கையின்படி பின்வருமாறு அமைகின்றது.

இந்தச் சுற்றறிக்கை வாயிலாக தற்பொழுது பெற்றுவரும் அடிப்படைச் சம்பளத்திற்கு நேரொத்த சம்பளப் படிநிலை புதிய சம்பளமாக 01-12-2004 இல் இருந்தாலும், 01-12-2004 இல் வழங்கப்படும் சம்பளமானது பின்வருமாறு அமையும்.

அதாவது 30-11-2004 இல் பெற்ற சம்பளத்திற்கும் நேரொத்த புதிய சம்பளப் படிநிலைக்குமிடையில் காணப்படும் மொத்தச் சம்பள அதிகரிப்பின் 50 வீதமோ அல்லது மாதம் 2500 ரூபாவோ எது கூடுதலாக உள்ளதோ அந்தத் தொகை 30-11-2004 இல் பெற்ற சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு, 01.12.2004 இல் இருந்து வழங்கப்படும். மொத்த அதிகரிப்பின் மிகுதித் தொகை 01-01-2006 இல் வழங்கப்படும்.

உதாரணம் -

**A** அதிபர் தரம் **I** ஐச் சேர்ந்த சுப்பிரமணியத்திற்கு 09/2004 சுற்றுநிருபப்படி 01.12.2004 இல் சம்பளப் படிநிலை வருடம் 193920.00, 30.11.2004 இல் பெற்ற சம்பளம் வருடம் 138480.00, மொத்த அதிகரிப்பு 55440.00, 50 வீத அதிகரிப்பு வருடம் - 27720, மாதம் - 2310

மாதம் 2500 ரூபாவுக்குக் குறைந்த அதிகரிப்பாகையால் சுற்றறிக்கையின் படி 01.12.2004 இல் பெற்று வந்த சம்பளத்துடன் 2500 ரூபா வழங்கப்படும். மிகுதி அதிகரிப்பு (55440 - 30000) வருடம் 25440, மாதம் 2120 01.12.2004 இல் வழங்கப்படும்.

**B** இ.அதிபர் தரம் ஒன்றைச் சேர்ந்த வல்லிபுரத்துக்கு

09/2004 சுற்றுநிருபப்படி 01.12.2004 இல் சம்பளப்படிநிலை 259200.00, 30.11.2004 இல் பெற்ற சம்பளம் 185040.00, மொத்த அதிகரிப்பு 7416.00, 50 வீத அதிகரிப்பு வருடம் - 37080, மாதம் - 3090

50 வீத அதிகரிப்பானது 2500 இற்கு மேல் உள்ளதால் சுற்றறிக்கைப்படி 01.12.2004 இல் பெற்றுவந்த சம்பளத்துடன 3090 அதிகரிப்பும் 01.12.2006 இல் 3090 ரூபாவும் வழங்கப்படும்.

2. 01.12.2004 ஆம் திகதிக்கு முன் வழங்கப்பட்ட படிகள் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ளன.

3. மேலும் பல விடயங்கள் இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுற்றறிக்கை 10.2 இன்படி 01.12.2004 இன் பின் ஓய்வுபெறுபவர்களுக்கு ஓய்வுபெறும் திகதியில் ஓய்வூதியக் கணக்கிற்காக இச்சுற்றறிக்கையில் அதிகரிக்கப்பட்ட முழுத்தொகையையும் சேர்த்துக் கணக்கிடப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேலதிக விபரங்களை சுற்றறிக்கையைப் பார்ப்பதன்மூலம் அறிந்துகொள்ளலாம்.

**TA** 16 - 6 இலங்கை அதிபர் சேவை தரம் 1
30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம்
15/2003
138480 - 4X5520 - 6X6120 -197280

அ.பொ.நி. சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
1.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
193920 - **4x7740-6x8580 - 276360**

| | | | |
|---|---|---|---|
| | 138480 | 11540 | **193920 - 16160** |
| 1 | 144000 | 12000 | **201660 - 16805** |
| 2 | 149520 | 12460 | **209400 - 17450** |
| 3 | 155040 | 12920 | **217140 - 18095** |
| 4 | 160560 | 13380 | **224880 - 18740** |
| 5 | 166680 | 13890 | **233460 - 19455** |
| 6 | 172800 | 14400 | **242040 - 20170** |
| 7 | 178920 | 14910 | **250620 - 20885** |
| 8 | 185040 | 15420 | **259200 - 21600** |
| 9 | 191160 | 15930 | **267780 - 22315** |
| 10 | 197280 | 16440 | **276360 - 23030** |

**TA** 16 - 5 இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1
இலங்கை அதிபர் சேவை தரம் 2.1
30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம் 15/2003
132960 - 5/5520, 5/6120 - 191,160

அ.பொ.நி. சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
1.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
186180 - 5x7740, 5x8580 - 267780

| | | | | |
|---|---|---|---|---|
| | 132960 | 11080 | **186180** | **15515** |
| 1 | 138480 | 11540 | **193920** | **16160** |
| 2 | 144000 | 12000 | **201660** | **16805** |
| 3 | 149520 | 12460 | **209400** | **17450** |
| 4 | 155040 | 12920 | **217140** | **18095** |
| 5 | 160560 | 13380 | **224880** | **18740** |
| 6 | 166680 | 13890 | **233460** | **19455** |
| 7 | 172800 | 14400 | **242040** | **20170** |
| | 178920 | 14910 | **250620** | **20885** |
| | 185040 | 15420 | **259200** | **21600** |
| | 191160 | 15930 **Max** | **267780** | **22315** |

**TA** 16 - 4 இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2.1
இலங்கை அதிபர் சேவை 2.11
15/2003
105420 - 7x3000 - 126420

அ.பொ.நி. சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
1.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
147600 - 7x4200 - 177000

| | | | | |
|---|---|---|---|---|
| | 105420 | 8785 | 147600 | 12300 |
| 1 | 108420 | 9035 | 151800 | 12650 |
| 2 | 111420 | 9285 | 156000 | 13000 |
| 3 | 114420 | 9535 | 160200 | 13350 |
| 4 | 117420 | 9785 | 164400 | 13700 |
| 5 | 120420 | 10035 | 168600 | 14050 |
| 6 | 123420 | 10285 | 172800 | 14400 |
| 7 | 126420 | 10535 **Max** | 177000 | 14750 **Max** |

**TA** 16-3 இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2.**II**
இலங்கை அதிபர் சேவை 3
30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம்
15/2003
82320 - 12x2460 - 111840

அ.பொ.நி. சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
1.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
121320 - 6x2460 - 6x3480 - 156960

| | | | | |
|---|---|---|---|---|
| | 82320 | 6860 | 121320 | 10110 |
| 1 | 84780 | 7065 | 123780 | 10315 |
| 2 | 87240 | 7270 | 126240 | 10520 |
| 3 | 89700 | 7475 | 128700 | 10725 |
| 4 | 92160 | 7680 | 131160 | 10930 |
| 5 | 94620 | 7885 | 133620 | 11135 |
| 6 | 97080 | 8090 | 136080 | 11340 |
| 7 | 99540 | 8295 | 139560 | 11630 |
| 8 | 102000 | 8500 | 143040 | 11920 |
| 9 | 104460 | 8705 | 146520 | 12210 |
| 10 | 106920 | 8910 | 150000 | 12500 |
| 11 | 109380 | 9115 | 153480 | 12790 |
| 12 | 111840 | 9320 | 156960 | 13080 |

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

## உழவு இயந்திர பெட்டிகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ. மாநகரசபையின் தேவைகெகன வன்னி வேளாண் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 10 உழவு இயந்திரப் பெட்டிகளில் - 3 பெட்டிகள் நேற்று யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது.

ஏனைய பெட்டிகள் அடுத்த வாரமளவில் எடுத்துவரப்படும் எனவும், இதன்மூலம் குப்பை அகற்றுவதில் உள்ள சிக்கல் தீரும் எனவும மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

## அடையாள அட்டை கண்டெடுப்பு!

(யாழ்ப்பாணம்)

238/1 வேலணை எனும் முகவரியைச் சேர்ந்த பொன்னையா சிவபாக்கியம் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான நிதியுதவி செய்தோர் விபரம் வருமாறு

கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில், 'நமது ஈழநாடு' நிறுவனம் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களிடம் நிவாரண உதவிகளைச் சேகரித்தது. இதன்போது பணமாக உதவியோர் விபரம் வருமாறு-

| பெயர் | முகவரி | பெறுமதி (ரு) |
|---|---|---|
| மு.பாலா | 42/2 வேலப்பர் வீதி அரியாலை | 200 |
| அ.டினேஸ் | 38 - வேலப்பர் வீதி அரியாலை | 100 |
| சி.நடராசா | அரியாலை மேற்கு | 100 |
| யே.குமார் | அரியாலை | 500 |
| க.தர்மரத்தினம் | அரியாலை | 100 |
| ரதன் | சிகை அலங்கார நிலையம், அரியாலை | 100 |
| ஜீவா | 27.புங்கங்குளம் வீதி அரியாலை | 500 |
| சி.தர்மதேவன் | 51. ஈச்சமோட்டை | 1000 |
| விக்னேஸ்வரன் | ஈச்சமோட்டை | 100 |
| ச.ஜெயவிக்கிரமன் | ஈச்சமோட்டை | 100 |
| யோன்சன் | ஈச்சமோட்டை | 100 |
| க.புவனேஸ்வரன் | ஈச்சமோட்டை | 250 |
| இராஜேந்திரன் | ஈச்சமோட்டை | 100 |
| இளங்கோ | ஈச்சமோட்டை | 1000 |
| பாலசுப்பிரமணியம் | சுண்டுக்குளி | 150 |
| தனராஜ் கபில | கொழும்பு | 2000 |
| பிரியா | கொய்யாத்தோட்டம் | 50 |
| சோதி | - | 100 |
| யோகேந்திரன் | கொய்யாத்தோட்டம் | 10 |
| சூ.இரஞ்சனி | பழைய பூங்கா வீதி | 200 |
| கிருஷ்ணராஜா | கொய்யாத்தோட்டம் | 500 |
| வைமன் | கொய்யாத்தோர்ட்டம் | 100 |
| ஜே. அல்பட் | கொய்யாத்தோட்டம் | 500 |
| நரேஸ் | கொய்யாத்தோட்டம் | 50 |
| பிரசன்னா | கொய்யாத்தோட்டம் | 100 |
| டயஸ் | கொய்யாத்தோட்டம் | 100 |
| சிவசக்தி | கொய்யாத்தோட்டம் | 100 |
| புஸ்பகுமார் | கொய்யாத்தோட்டம் | 500 |
| தங்கம்மா | கொய்யாத்தோட்டம் | 200 |
| விஜி | கொய்யாத்தோட்டம் | 50 |
| மரியநாயகம் | கொய்யாத்தோட்டம் | 100 |
| தீபா | கொய்யாத்தோட்டம் | 100 |
| றஜீனா | கொய்யாத்தோட்டம் | 500 |
| சுகந்தி | கொய்யாத்தோட்டம் | 1000 |
| ஜெதீந்திரதாஸ் | கொய்யாத்தோட்டம் | 100 |
| கொன்சன் | கொய்யாத்தோட்டம் | 200 |
| துறைசிங்கம் | கொய்யாத்தோட்டம் | 100 |
| அல்பேட் | கொய்யாத்தோட்டம் | 200 |
| எடிசன் | கொய்யாத்தோட்டம் | 100 |
| யோ.ஜெராட் | கொய்யாத்தோட்டம் | 50 |
| தயாளன் | பாஷையூர் | 100 |
| டொமேஸ் | பாசையூர் | 300 |
| ரவி | பாசையூர் | 100 |
| யோகநாதன் | கொய்யாத்தோட்டம் | 100 |
| ஜென்சி | பாசையூர் | 500 |
| குணரஞ்சன் | பாஷையூர் | 100 |
| சுவேதன் | இணுவில் | 500 |
| ராஜன் | ஐந்து சந்தி, யாழ்ப்பாணம் | 50 |
| குமார்பாலன் | ஐந்து சந்தி, யாழ்ப்பாணம் | 500 |
| சம்பத் | - | 200 |
| வே.அருள்விந்தன் | அரியாலை | 100 |
| பஞ்சாச்சரம் | வேலப்பர் வீதி - அரியாலை | 100 |
| கருணாகரன் | வேலப்பர் வீதி - அரியாலை | 100 |
| செல்வராஜா | அரியாலை | 100 |
| கந்தசாமி | வேலப்பர் வீதி - அரியாலை | 200 |
| நர்மதா | 239.சென் பெனடிக் வீதி, அரியாலை | 200 |
| சுரேஷ்வரன் | அரியாலை | 50 |
| பரமநாயகம் | அரியாலை | 200 |
| தேவகுனராஜா | அரியாலை | 101 |
| ஆட்டோக் கிளி | அரியாலை | 100 |
| அன்னை ஸ்ரோர்ஸ் | அரியாலை | 100 |
| வி.கருணாநிதி | புங்கங்குளம் வீதி அரியாலை | 200 |
| வி.சிவலிங்கம் | 42/3 புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை | 500 |
| கே.பாலசுந்தரம் | 68, புங்கஙகுளம் வீதி கொழும்புத்துறை | 500 |
| சி.கணநாதபிள்ளை | கொமும்புத்துறை | 50 |
| டியூத் | கொமும்புத்துறை | 100 |
| ஆ.ஸ்ரீதரன் | கொமும்புத்துறை | 200 |
| ஆர்.ராஜேஸ்வரன் | ஈச்சமோட்டை | 100 |
| கிரிஸ்தோபர் | ஈச்சமோட்டை | 200 |
| தீபன் திலீசன் | ஈச்சமோட்டை | 100 |
| மன்மதராஜா | 19 ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி | 1000 |
| பிறிட்டோ | ஈச்சமோட்டை | 100 |
| நாகமுத்து | பழைய பூங்கா வீதி | 100 |
| மனோகரி | பழைய பூங்கா வீதி | 100 |
| செல்லதம்பு | பழைய பூங்கா வீதி | 100 |
| சிவானந்தன் | பழைய பூங்கா வீதி | 40 |
| அன்டன் | பழைய பூங்கா வீதி | 200 |
| ஆர்.மரியதாஸ் | பழைய பூங்கா வீதி | 100 |
| ஞானபிரகாசம் | கொய்யாத்தோட்டம் | 500 |
| சிவபாக்கியம் | கொய்யாத்தோட்டம் | 50 |
| யோ.ரஞ்சன் | கொய்யாத்தோட்டம் | 50 |
| மாலா | கொய்யாத்தோட்டம் | 100 |
| சந்திரவேல் | கொய்யாத்தோட்டம் | 50 |
| எஸ்.விக்டர் | கொய்யாத்தோட்டம் | 200 |
| எஸ்.கலான் | கொய்யாத்தோட்டம் | 200 |
| யோகநாதன் | கொய்யாத்தோட்டம் | 400 |
| சவரியம்மா | கொய்யாத்தோட்டம் | 50 |
| யோகேந்திரன் | கொய்யாத்தோட்டம் | 1000 |
| **Com.net** | கொய்யாத்தோட்டம் | 50 |
| ஒரு அன்பர் | கொய்யாத்தோட்டம் | 80 |
| குருசு அன்றனிற்றா | புதிய வீதி, கொய்யாத்தோட்டம் | 500 |
| புல்டோ | சென்.அந்தனீஸ் ஸ்ரோர்ஸ் புது வீதி | 100 |
| ஒரு அன்பர் | கொய்யாத்தோட்டம் | 200 |
| பிரபாகரன் | புதிய வீதி, பாஷையூர் | 100 |
| ஜே.ஜீவரட்னம் | புதிய வீதி, பாஷையூர் | 150 |
| எஸ்.இ.ஜோசேப் | பாஷையூர் | 100 |
| கே.யோகநாதன் | பாஷையூர் | 100 |
| ஏ.ரவிதாஸ் | பாஷையூர் | 100 |
| வீ.கிருஷ்னானந்தன் | பாஷையூர் | 200 |

(நாளை தொடரும்)

# கொபி அனானின் தூதர் இலங்கைக்கு விஜயம்!




(கொழும்பு)

ஐ.நா.செயலர் கொபி அனானின் விசேட தூதுவராக இரண்டு நாள் விஜயமாக கொழும்பு வந்துள்ள மாகரேற்றா வோல்ஸ் ரோம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜகத் அபயசிங்கவைச் சந்தித்து கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மேற்கொள்ளப்பட்டு வரும் உதவிப் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

தேசிய செஞ்சிலுவைச் சங்கங்கள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் போன்று ஐ.நாவில் முக்கிய பங்குவகிக்கின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலில் இங்குள்ளவர்கள் என்ற வகையில் நீங்களே முதலில் உதவி செய்யவேண்டும். சமூக ரீதியாக மக்களுக்கு என்ன உதவி வழங்கப்பட்டது என்பதே முக்கியமானதென இந்தச் சந்திப்பில் வோல்ஸ் தெரிவித்தார்.

கடற் கொந்தளிப்பு கடந்த 26 ஆம் திகத ஏற்பட்டதிலிருந்து இன்று வரை செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள் அனைத்தும் பாதிக்கப்படட பிரதேசங்களில் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றன.

இதில் அனர்த்தத்தில் சிக்குண்டு உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டெடுத்தல், காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு அனுப்புதல் நடமாடும் வைத்திய சேவைகளை நடத்துதல், உணவல்லாத பொருட்களை வழங்குதல் முதலுதவிச் சிகிச்சைகளை வழங்குதல், மற்றும் பிரிந்த குடும்பங்களை ஒன்றிணைத்தல் போன்ற செயற்பாடுகளை செஞ்சிலுவைச் சங்கத்தின் பல தொண்டர்கள் செய்து வருவதாக ஜகத் அபயசிங்க, வோல்சிற்கு தெரிவித்தார்.

இதேவேளை, ஐரோப்பிய யூனியனின் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான உதவிப் பணிகளின் பணிப்பாளர் லூயிஸ் மைக்கல் மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் இருவரும் இணைந்து கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட காலி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு நேற்றுக் காலை விஜயம் செய்யதனர்.

# வடக்கு மாவட்டங்களுக்கு விசேட செயலணிக்குழுக்கள்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு வடபகுதியில் மூன்று மாவட்டங்களுக்கான மனிதாபிமான உதவி செயலணிக்குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா நிறுவியுள்ளார்.

சுனாமி இராட்சத அலைகளால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கே இந்தச் செயலணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலணிக்குழுவின் தலைவராக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த செயலணிக்குழு சகல அரசாங்க நிறுவனங்களினதும், முப்படைகளினதும், பொலிஸாரினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளவுள்ளது.

அத்தோடு வவுனியாவில் தற்போது நிலைகொண்டுள்ள பிரான்சைச் சேர்ந்த மீட்புக் குழுக்களும் இந்தச் செயற்குழு மூலம் தகவல்கள் பெற்றுக்கொள்ளும் எனத் தெரியவருகிறது.

## பாதிக்கப்பட்ட

# மாவட்ட செயலகங்களுக்கு செய்மதித் தொலைபேசிகள்!

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மாவட்ட செயலாளர்களுக்கு செய்மதித் தொலைபேசி வசதியை வழங்குவற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கமைய காலி, அம்பாந்தோட்டை, அம்பாறை ஆகிய மாவட்டச் செயலகங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 செய்மதித் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை உதவி மாவட்ட செயலாளர்கள் 100 பேருக்கு கையடக்கத் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடற்கொந்தளிப்புக் காரணமாக கரையோரப் பிரதேசங்களில் தொலைத்தொடர்புச் சேவைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளதால், தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல் மற்றும் இழப்பீட்டு விபரங்களை அறிந்து கொள்ளுதல் ஆகியவற்றுக்கு பாரிய சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

## வெளிநாடுகளிலிருந்து

# வட-கிழக்கு செல்லும் உதவிப்பொருட்களை கடுமையாகச் சோதனையிடுமாறு உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல அரசசார்பற்ற நிறுவனங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரும் உதவிப்பொருட்கள் படையினரால் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாகவே இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக, சமூக சேவைகள் அமைச்சின் அதிகாரி தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கென வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட உதவிப்பொருட்களின் கொளகலன்கள் மட்டுமே இவ்வாறு விசேட சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் பாதுகாப்புக்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் -

அரசாங்கத்துக்கு வெளிநாடுகளிருந்து கிடைக்கும் உதவிகளும் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு நீதியான முறையில் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும், சமூக சேவைகள் அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித்தார். (தே)

## இந்திய வெளியுறவுச் செயலரின் மகன்

# ஹெலி மூலம் காப்பாற்றப்பட்டதாக வெளியான செய்திக்கு மறுப்பு!

சுனாமி கடற்கொந்தளிப்பால் இலங்கை தாக்கப்பட்டபோது, தென் பகுதியில் உள்ள உல்லாச விடுதி ஒன்றில் தங்கியிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்கின் மகன் இந்தியத் தூதரகத்தால் அனுப்பப்பட்ட விசேட ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டார் என வெளியான செய்தியை அவர் மறுத்துள்ளார்.

சுனாமி அலையால் இலங்கை தாக்கப்பட்ட சமயம் நட்வர்சிங்கின் மகன் ஜகத்சிங் பெந்தோட்டையில் உள்ள தாஜ் எக்ஸ்ரோட்டிக்கா கடற்கரையோர உல்லாச விடுதியொன்றில் தங்கியிருந்தார் என்று இவரை இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் விசேட ஹெலிகொப்டர் ஒன்றின் மூலம் மீட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் இந்தச் செய்தியை மறுத்துள்ள ஜகத்சிங் அனர்த்தம் இடம்பெற்ற வேளையில் தான் வீதி வழியாகவே நடந்து வந்ததாகவும், அப்போது பொலிஸார் தன்னை வாகனத்தில் ஏற்றிக் கொழும்புக்கு அழைத்துச் சென்றதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, அவசர மனிதாபிமான உதவிகளை மேற்கொள்கின்ற இந்திய மீட்புக்குழுவுடன் இணைந்து செயற்படத் தாயராகவுள்ளதாகவும் ஜகத்சிங் தெரிவித்தார்.

# உதவிப்பொருள் வாகனங்களுக்கு இராணுவ, பொலிஸ் பாதுகாப்பு!

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக உதவிப் பொருட்களைக் கொண்டு செல்லும் வாகனங்கள் கொள்ளையிடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், அந்த வாகனங்களைக் கொண்டு செல்லும் அனைவரும், பொலிஸ் மற்றும் படையினரின் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படும் உதவிப் பொருட்கள் இடைவழியில் கொள்ளையிடப்படுவதாக- தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும் முறைப்பாடுகள் ஜனாதிபதி செயலகத்துக்குக் கிடைத்துள்ளன.

இது போன்ற சம்பவமொன்று ஹபரணையில் இடம்பெற்றதாகவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே உதவிப்பொருட்களை எடுத்துச் செல்லும் அரச மற்றும் அரச சார்பற்ற வாகனங்கள் இது குறித்துக் கவனமாக இருக்க வேண்டும்.

தேவைப்படின் பொலிஸ் மற்றும் படையினரின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# சுனாமி உயிரிழப்பு 30 ஆயிரமாக உயர்வு!

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரமாக உயர்ந்துள்ளது என அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 10436 பேரும்,அம்பாந்தோட்டையில் 4500 பேரும், காலியில் 3901 பேரும், யாழ்ப்பாணத்தில் 2640 பேரும், மட்டக்களப்பில் 2500பேரும், முல்லைத்தீவில் 2000 பேரும், மரணமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவநிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

1,62,942 குடும்பங்களை சேர்ந்த 8,15948 பேர் இயற்கை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் 778 முகாம்களில் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் 81,059 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதுடன் 24,900 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. பல கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இயற்கை அனர்த்தங்களை கண்டறியும்

# உயர் தொழில்நுட்பக் கருவிகளை ஆசிய நாடுகளில் பயன்படுத்த முடிவு

(கொழும்பு)

ஒரு வருட காலப்பகுதிக்குள் கடலின் நடுவே ஏற்படும் அனர்த்தங்களைக் கண்டறியக்கூடிய உயர் தொழில்நுட்பம் வாய்ந்த கருவிகளை ஆசிய நாடுகளில் பயன்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுனாமி அலையினால் தென் கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட அனர்த்தங்களையடுத்து இத்தகைய பாதிப்புக்கள் இனிவருங்காலங்களில் ஏற்படாது தடுப்பதற்காக - உயர் தொழில்நுட்பம் வாய்ந்த கருவிகளை தென்கிழக்காசிய நாடுகளில் பொருத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறான அனர்த்தங்களைக் கணப்பொழுதில் கண்டறியக்கூடிய உயர் தொழில்நுட்பம் வாய்ந்த நாடுகளுடன், ஆசிய வலய நாடுகள் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னெச்சரிக்கை மற்றும் ஆயத்தத்துடன் இருந்தால் சுனாமி அலையில் இத்தகைய பாரிய இழப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கமுடியும் என்று ஐக்கிய நாடுகளின் இடர்களைக் குறைக்கும் வழிகள் பற்றிய நிறுவனத்தின் தலைவர் கல்வானோ பிறைற்றினஸ் தெரிவித்தார். (தே)

# உதவிகளை சுரண்டுவோருக்கு எதிராக ஊழல் ஒழிப்புப் பிரிவு!

இலங்கையில் கடந்த வாரம் இடம்பெற்ற அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான மக்களின் இயல்பு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும் வகையிலான அபிவிருத்திக்கெனக் கிடைக்கும் தேசிய மற்றும் சர்வதேச நிதி மற்றும் பொருள் உதவிகளைச் சுரண்டுவோருக்கு எதிராக கடுமையான சட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி சம்பந்தப்பட்ட உதவிகளை வஞ்சனையாகவோ அன்றி மோசடியாகவோ பாவிப்பதற்கு அல்லது அதற்குத் துணைபோபவருக்கு அல்லது குழுவினருக்கு எதிராக செயற்படுத்துவதன் பொருட்டு பரந்துபட்ட அளவிலான ஊழல் ஒழிப்பு பிரிவொன்றை உடனடியாக அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பிரிவு இன்னும் சில தினங்களுக்குள் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகுந்த அவதானத்தோடு செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து விசேட தகவல்கள் தெரிந்தால் இந்தக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு அனைத்து அரச சார்பற்ற அமைப்புக்களிடமும், பொதுமக்களிடமும் வேண்டுகோள் விடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து உடனடியாக சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று பிரச்சினைகளைக் கண்டறிவதற்கு விசேட குழுவொன்றையும் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களையும், சிவில் அமைப்புக்களின் அங்கத்தவர்களையும் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

# பாகிஸ்தானுடனான டெஸ்ட் போட்டி வலுவான நிலையில் அவுஸ்ரேலியா!



சிட்னியில் நடைபெறும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 304 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்ததை அடுத்து, பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 340 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையிலுள்ளது.

முதல்நாள் ஆட்டநேரமுடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 296 ஓட்டங்கள் என்றநிலையில் இருந்த பாகிஸ்தான் அணி நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது.

எனினும் 304 ஓட்டங்களைப் பெறுவதற்குள்ளாகவே பாகிஸ்தான் அணியின் சகல விக்கெட்டுக்களும் வீழ்த்தப்பட்டன. கடைசியாக கம்ரன் அக்மல் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

இவரது விக்கெட்டை மக்ரா கைப்பற்றினார். இதைத் தொடர்ந்து அவுஸ்ரேலிய அணி ஆட்டத்தை ஆரம்பித்தது. தொடக்க வீரர் லாங்கர் 13 ஓட்டங்களை எடுத்த நிலையில் நவீட்-உல்-ஹசனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஹைடனும் பொண்டிங்கும் இணைந்து ஓட்டங்களைக் குவித்தபோதும் - அணியின் ஸ்கோர் 83 ஆக உயர்ந்தபோது அடுத்த விக்கெட் வீழ்த்தப்பட்டது. 57 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹைடன் டனேஸ் கனேரியாவால் போல்டாக்கப்பட்டார்.


இதனையடுத்து மார்ட்டின் களம் இறங்கி



பொண்டிங்குடன் இணைந்து அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். இந்த ஜோடியைப் பிரிக்க பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

ஸ்கோர் 257 ஆக உயர்ந்தபோதுதான் பாகிஸ்தான் வீரர்களின் பந்துவீச்சுக்கு மார்ட்டின் வீழ்ந்தார்.

135 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன்



67 ஓட்டங்களைப் பெற்றநிலையில் மார்ட்டினின் விக்கெட்டை கனேரியா வீழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து கிளார்க் களமிறங்கி ஆடினார். எதிர்முனையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த பொண்டிங் சதமடித்து அணியின் ஸ்கோரை உயர்த்திக் கொண்டிருந்தார்.

அணியின் ஸ்கோர் 318 ஆக இருந்தபோது கனேரியா கிளார்க்கின் விக்கெட்டை வீழ்த்தினார். 50 பந்துகளில் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 35 ஓட்டங்களை கிளார்க் பெற்றார்.

இதையடுத்து கில்கிறிஸ்ட் களமிறங்கினார். இவர் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களையும், பொண்டிங் ஆட்டமிழக்காமல் 23 பவுண்டரிகளுடன் 155 ஓட்டங்களையும் பெற்றநிலையில் நேற்றைய ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆட்டநேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட் இழப்புக்கு 340 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## ஷரபோவா சம்பியனானார்!



தாய்லாந்தில் நடந்த கண்காட்சி ரெனிஸ் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

தாய்லாந்தில் வரும் ஒக்ரோபரில் ஏ.ரி.பி. அந்தஸ்து பெற்ற ரெனிஸ் போட்டி நடைபெறவுள்ளது. இதற்கு முன்னோடியாக வீனஸ் வில்லியம்ஸ், ஷரபோவா மோதும் கண்காட்சிப் போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் நடப்பு விம்பிள்டன் சம்பியனான ஷரபோவா அற்புதமாக செயற்பட்டார்.

முதல் செட்டை 6-4 என்ற கணக்கில் வென்ற ஷரபோவா, அடுத்த செட்டிலும் ஆதிக்கம் செலுத்தினார். இறுதியில் 6-4, 6-3 என்ற நேர் செட்களில் வீனஸை வீழ்த்திய ஷரபோவா கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

பாடசாலைமட்ட உதைபந்தாட்டம்

## தேவரையாளி இந்துக் கல்லூரி தேசிய மட்டத்துக்குத் தெரிவு!



இலங்கைப் பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 13 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது.

வடமராட்சி வலயத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கும், வடமராட்சி வலய பாடசாலை உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்திய போட்டியில் 08 பாடசாலைகள் பங்குபற்றின.

அதில் தேவரையாளி இந்துக் கல்லூரி, வல்வை சிவகுரு வித்தியாலயத்தை 13:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று அரைஇறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியுடன் மோதி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், தேவரையாளி இந்துக் கல்லூரியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி நேரடியாக இருபாடசாலைகளும் மாவட்டமட்டப் போட்டியில் பங்குபற்றின.

இதில் 4 வலயங்களிலிருந்து 07 பாடசாலைகள் பங்குபற்றின. வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி காலிறுதி ஆட்டத்தில் இளவாலை ஹென்ரீஸ் அணியை 4:1 என்ற கோல்கணக்கிலும், அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் அணியை தண்டனை உதைமூலம் 8:7 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இறுதியாட்டத்தில் அளவெட்டி அருணோதயா கல்லூரியும் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதின. அதில் தேவரையாளி இந்துக் கல்லூரி, அளவெட்டி அருணோதயா கல்லூரியை 3:0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து யாழ்.மாவட்டச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியது.

இதில் சிறந்த ஆட்டநாயகனாக, சகல ஆட்டங்களிலும் அதிக கோல்களைப் போட்ட அணித்தலைவர் த.பிரதீப் தெரிவு செய்யப்பட்டார்.

தேவரையாளி இந்துக் கல்லூரி தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளது இதுவே முதற் தடவையாகும். (12)

2004இன் சிறந்த ஐரோப்பிய காற்பந்து வீரராக உக்ரைனைச் சேர்ந்த அன்டி ஷெவ்கென்கோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்காக இவருக்கு 'தங்கப்பந்து' விருது வழங்கப்பட்டது. விருதுடன் உக்ரைனில் உள்ள கீவ் நகருக்கு வந்த அன்ட்ரிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.



சுனாமி நிவாரண கிரிக்கெட்

## உலக லெவன் அணிக்கு ரிக்கி பொண்டிங் கப்டன்




சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண நிதிக்காக நடைபெறவுள்ள ஒருநாள் போட்டியில் உலக லெவன் அணிக்கு ரிக்கி பொண்டிங் கப்டனாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி திரட்டும் வகையில் உலக லெவன், ஆசிய லெவன் அணிகளுக்கிடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டி மெல்போர்னில் வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்கும் உலக லெவன் அணியில் மேற்கிந்தியத் தீவுகளின் பிரையன் லாரா, அவுஸ்ரேலியாவின் ஷேன் வோன், நியூஸிலாந்தின் பிளெமிங் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவ்வோ உலக லெவன் அணியைத் தெரிவு செய்துள்ளார்.

இதனுடன் போட்டியிடும் ஆசிய லெவன் அணியை நியூஸிலாந்தின் ரிச்சர்ட் ஹட்லி தெரிவு செய்யவுள்ளார்.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து ஆசிய லெவனுக்கான வீரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

உலக லெவன் அணி - ரிக்கி பொண்டிங் (அவுஸ்.கப்டன்), ஹைடன், கில்கிறிஸ்ட், வோன், மக்ரா (அனைவரும் அவுஸ்ரேலியா), பிளெமிங், கெய்ன்ஸ், விற்றோரி (மூவரும் நியூஸிலாந்து), லாரா, கெய்ல், பிராவோ (மூவரும் மேற்கிந்தியத் தீவுகள்), டரன் கொவ் (இங்கிலாந்து).

பயிற்சியாளர் மற்றும் மேலாளர் - ஸ்ரீவ் வோ (அவுஸ்ரேலியா)

## இங்கிலாந்து அணிக்கு எதிராக தென்னாபிரிக்கா நிதான ஆட்டம்!




இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 4 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்களைப் பெற்றது.

கேப்டவுனில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தப் போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஆட்டம் தொடங்கி சற்று நேரத்திலேயே அணியின் முதல் விக்கெட் வீழ்த்தப்பட்டது. கிப்ஸ் 4 ஓட்டங்களை மட்டுமே பெற்றநிலையில் ஹொகாட்டின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க நேரிட்டது.

இதையடுத்து சிமித்துடன் ரூடொல்ப் இணைந்து கொண்டார். இருவரும் இணைந்து அபாரமாக ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்திக் கொண்டிருந்தபோது அடுத்த விக்கெட் வீழ்த்தப்பட்டது.

ஸ்கோர் 70 ஆக இருந்தபோது ரூடொல்ப் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் கலிஸ் களமிறங்கி அபாரமான ஆட்டத்தை ஆரம்பித்தார்.

எனினும் எதிர்முனையில் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த சிமித் 74 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நேரிட்டது. இந்த விக்கெட்டை கைல்ஸ் வீழ்த்தினார்.

ஐந்தாவது விக்கெட்டுக்கு கலிஸுடன் டிப்பெனர் ஜோடி சேர்ந்தார். எனினும் இவர் பெருமளவு பந்துகளை வீணடித்துக் கொண்டிருந்தார். 101 பந்துகளில் 2 பவுண்டரிகளை மட்டும் அடித்து, 29 ஓட்டங்களைப்பெற்ற இவர் கைல்ஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அம்லா 21 ஓட்டங்களையும், கலிஸ் 81 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தநிலையில் முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது அணி 4 விக்கெட் இழப்புக்கு 247 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# ஜேர்மன் வைத்திய நிபுணர் குழு நேற்று குடாநாட்டுக்கு விஜயம்


பலாலி இராணுவ வைத்தியசாலையில்

ஆசிய ஜேர்மன் பரிமாற்றத் திட்டத்தின்கீழ் ஜேர்மன் வைத்திய நிபுணர் குழுவொன்று நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து ஒரு லொறி மருந்துப் பொருட்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கும், பலாலி இராணுவ வைத்தியசாலைக்கும் வழங்கினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தனவின் உதவியுடன் கலாநிதி எரிமை டோறின் தலைமையிலான 15 மருத்துவர்கள் அடங்கிய குழுவினரே வருகை தந்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்குச் சென்று இரண்டு லொறி மருந்துப் பொருட்கள் மற்றும் வைத்திய உபகரணங்களை வழங்கிய பின்னர், நேற்றுக் காலை யாழ்.குடாநாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் ரவிராஜிடம் மருந்துப் பொருட்களை வழங்கினர். தொடர்ந்து பலாலி இராணுவ வைத்தியசாலைக்குச் சென்று இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோனிடமும் மருந்துப் பொருட்களை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து மாலை 3.30 மணியளவில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

## பாதிக்கப்பட்ட இடங்களை சுரேஷ் பிரேமச்சந்திரன் பார்வையிட்டார்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தாளையடி, செம்பியன்பற்று மற்றும் வடமராட்சி கிழக்கிலுள்ள வல்வெட்டித்துறை, பொலிகண்டி, சுப்பர்மடம் ஆகிய இடங்களை- யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பார்வையிட்டதுடன், கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய இளைஞர்களுடன் இணைந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான அவசர நிவாரணப் பொருட்களையும் கையளித்தார்.

# உளநலப் பணிக் குழுவினால் வளவாளர்களுக்கு பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட இடங்களில் அவசர உளநலப் பணிகளை மேற்கொள்வதற்காக, யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே உளநலம்சார் பயிற்சிகள் பெற்ற 110 வளவாளர்களுக்குத் தற்போது ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் ஏற்படக்கூடிய உளநலப் பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பாகக் குறுங்காலப் பயிற்சி ஒன்று அனர்த்தகால உளநலப் பணிக்குழுவால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உளநலப் பணிக் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உளநலம் சார்பாக ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களும், அவசர காலப் பணிகளில் இணைந்து செயறபட ஆர்வமாக இருப்பவர்களும் மேற்படி பணிக்குழுவின் தொலைபேசி இலக்கமான 222-3338 என்ற இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்தக் குழுவின் ஆலோசனைகள் மற்றும் உதவிகள் தேவைப்படும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட இடங்களில் இயங்கும் முகாம்கள், தற்காலிக தொண்டு நிலையங்களும் மேற்படி தொலைபேசி இலக்கத்திலோ இல. 15, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# இரும்புக் கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இரும்புக்கடையொன்றில் பட்டப்பகலில் திருட்டுச் சம்பவம் நடைபெற்றது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது - கடைமுதலாளி வங்கியில் காசு எடுப்பதற்காக சிறுவன் ஒருவனை கடையில் நிற்குமாறு கூறிவிட்டுச் சென்றார்.

இதைப் பார்த்துக்கொண்டு நின்ற திருடன் முதலாளி சென்றவுடன் சிறுவனைத் தாக்கிவிட்டு அரப் பேப்பர், ஆணி வகைகள் போன்றவற்றைத் திருடிச் சென்றுவிட்டார்.

முதலாளி வந்தபோது சிறுவன் அழுதுகொண்டிருந்ததாகவும், அதன் பின்னர் அடுத்தநாளும் இதே நேரத்துக்கு திருடன் கடைக்குள் புகுந்தபோது இளைஞர்களால் திருடன் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். தற்போது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (72)

# சிதறுண்ட மக்களை ஒன்றிணைக்க பருத்தித்துறையில் விசேட கருமபீடம்

சுனாமி பேரலையை அடுத்துச் சிதறுண்டுள்ள கரையோர மக்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கு உரிய முறையில் நிவாரணங்கள் சென்றடைவதைக் கண்காணிப்பதற்கென வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் பருத்தித்துறையிலுள்ள தனது அலுவலகத்தில் 24 மணிநேரமும் இயங்கும் வகையில் விசேட கருமபீடம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

தொண்டமானாறு தொடக்கம் குடத்தனை வரையிலான பகுதி மக்களும், வலிகாமம் வடக்கு மக்களும் சிதறுண்ட உறவுகளை ஒன்றிணைக்க இந்தக் கருமபீடத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் காணாமல் போனவர்கள் மற்றும் காயமடைந்தவர்களைக் கண்டுபிடித்து உறவினர்களுடன் இணைத்துக் கொள்ள வசதியாக இருக்கும் எனக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர் கங்கை அழகன் தெரிவித்தார்.

இதேபோல் வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் இவ்வாறு சிதறிப்போன மக்கள் தொடர்பாகக் கருமபீடங்கள் இயங்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு சிதறுண்டு போயுள்ள மக்கள் தொடர்பாகக் கருமபீடம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்கள் பற்றிய விபரத்தைச் சேகரிப்பதுடன், நிவாரணப் பணிகள் ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதை அவதானிப்பதுடன், அவை மக்களுக்குச் சென்றடைகிறதா என்பதையும் அவதானிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆதரவற்ற குழந்தைகளை தத்தெடுக்க

# நலன்புரி நிலையங்களுக்கு படையெடுக்கும் தம்பதிகள்

வெள்ள அனர்த்தத்தைத் தமக்குச் சாதகமாக்கி குழந்தைப் பேறில்லாத தம்பதிகள் தமது குறையைப் போக்க முகாம்களுக்குப் படையெடுத்து வருகின்றனர்.

ஆதரவற்ற குழந்தைகளாக உயிர்தப்பிய குழந்தைகளைத் தத்தெடுக்கவென்று அலையும் பெற்றோரை வடமராட்சியில் காணக்கூடியதாக உள்ளது.

குழந்தைகளைத் தத்தெடுக்க வந்தவர்கள் உள்நோக்கம் என்ன என்பது தெரியவில்லை. வியாபார நோக்கமாகவும் குழந்தையைத் தத்தெடுக்கலாமென்றும் அஞ்சப்படுகிறது.

ஆதரவற்ற குழந்தைகளை உறவினரெனக் கூறி, அவர்களை ஆதரிக்கின்றவர்களெனத் தம்முடன் வைத்திருந்து விற்பனை செய்யயும் நடவடிக்கைகளும் இடம்பெறலாம் என அஞ்சப்படுகிறது.

எனவே பெற்றோரையும், சகோதரர்களையும் இழந்து நிர்க்கதியான குழந்தைகளை இனங்கண்டு அவர்களுக்கென தனியான பராமரிப்புப் பிரிவு உடன் ஆரம்பிக்கப்படவேண்டுமென பலரும் கருத்துத் தெரிவித்தனர். (13)

# வாடிக்கையாளரின் கைகளிலேயே வங்கியின் வளர்ச்சி தங்கியுள்ளது!

## இலங்கை வங்கி முகாமையாளர் அருமைநாயகம்

வங்கி என்ற விதையை ஊன்றியுள்ளோம். அதை வளர்த்து, விருட்சமாக்க வேண்டியது வாடிக்கையாளர்களாகிய உங்கள் கையிலே தான் தங்கியுள்ளது.

இந்த வங்கியின் வளர்ச்சிக்கு உங்கள் ஆக்கமும், ஊக்கமும் தேவை. நீங்கள் வங்கியை வளர்த்தால், வங்கியும் வளர்ச்சியடைவதோடு, நீங்களும் வளர்ச்சி பெறுவீர்கள் என இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் தெரிவித்தார்.

மானிப்பாய் - இலங்கை வங்கிக் கிளையின் விரிவாக்க அலுவலகத்தை அண்மையில் சங்கானையில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில்- இலங்கை வங்கி தனது 65 ஆண்டுகளை நிறைவுசெய்து, 66 ஆவது ஆண்டில் காலடி பதித்துள்ளது. இந்த வங்கி பல பிரதேசங்களிலும் புதிய கிளைகளைத் திறந்து, தனது செயற்பாட்டை விரிவாக்கம் செய்து வாடிக்கையாளர்களுக்குத் தனது சேவையை வழங்கி வருகிறது.

அதே ரீதியில் இங்கும் ஓர் விரிவாக்க அலுவலகத்தைத் திறந்துள்ளோம். காலப்போக்கில் இது கணினி மயப்படுத்தப்பட்டு, சகல செயற்பாடுகளையும் மேற்கொண்டு பரிணாம வளர்ச்சியைப் பெறும். இவ்வாறு வளர்ச்சியைப் பெறுவதற்கு, வாடிக்கையாளர்களாகிய நீங்களே கை கொடுத்து உதவவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் தனது உரையில் -

இந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கனவு இன்று நனவாகியுள்ளது. கடந்த பல வருடங்களாக சங்கானையில் ஓர் இலங்கை வங்கிக் கிளையைத் திறக்குமாறு இந்தப் பகுதி மக்கள் பலரும் கோரிக்கை விடுத்தவண்ணம் இருந்தனர்.

இது ஓர் அரச வங்கியாகும். அதற்கேற்ப சில நடைமுறைகளை நாம் மேற்கொண்டு செயற்படுவதில் ஏற்பட்ட காலதாமதத்தால், உடனடியாக இவர்களது கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. எனினும் இன்று இங்கு திறந்து வைப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

உங்களது வங்கித் தேவைகளை நீங்கள் பூரணமாக இங்கு பெற்றுக்கொள்ளலாம். தற்போது மானிப்பாய் இலங்கை வங்கியில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள வாடிக்கையாளர்களும் எதுவித சிரமமுமின்றி இந்த வங்கியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

எதிர்வரும் காலத்தில் இந்த வங்கி கணினி மயமாக்கப்பட்டு, வாடிக்கையாளர்களுக்கு இலகுவான சேவையை வழங்கும். விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் வங்கித் தொடர்புகளைக் கொண்டுள்ள சகலருக்கும் இந்த வங்கி தனது சேவையைச் செய்வதற்கு எந்த நேரமும் தயாராக இருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், இலங்கை வங்கியின் கொழும்புக் காரியாலய சிரேஷ்ட முகாமையாளர் பி.சுந்தரலிங்கம், யாழ்.மாவட்ட பிரதான முகாமையாளர் சீ.நடராஜலிங்கம், வலி.மேற்கு உதவி பிரதேச செயலர் ரீ.பாபு உட்பட இந்தக் கிளையின் பொறுப்பதிகாரியாகக் கடமையேற்றுள்ள திருமதி கே.இராமலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (48)

# அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் அவல நீக்க ஆற்றுப்படையரங்கு!

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் பேரனர்த்தத்தின் காரணமாக வாழ்விடங்களை விட்டு நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான 'அவல நீக்க ஆற்றுப்படையரங்கு' ஆற்றுப்படுத்தலை அரங்க செயற்பாட்டுக் குழுவினர் நடத்தி வருகின்றனர்.

நேற்று புலோலி அமெரிக்க மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் மக்கள் ஆர்வமுடன் பங்குபற்றி - "அனர்த்தம் இடம்பெற்ற பொழுது தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், அந்தக் கணத்தில் தாங்கள் பட்ட அவலங்களையும் தமது உறவுகளின் இழப்புக்களையும் தமது மன வேதனைகளையும் வெளிப்படுத்தினார்கள்.

தற்போது தமக்குள்ள பிரச்சினைகளையும், இழந்துபோன தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதைப் பற்றியும் அவர்கள் கதைத்தனர்.

சிறுவர்களும் கூட அவர்களுக்கான பிரத்தியேக அரங்காடலில் ஈடுபட்டனர்." இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டுமென அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வுகளில் அரங்க செயற்பாட்டுக் குழுவினருடன் இணைந்து வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்களும் பங்குபற்றி வருகின்றனர்.

யாழ்.கல்வி வலய ஆசிரியர்களும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களும் ஆற்றுப்படுத்தற் செயற்பாட்டில் ஈடுபட முன்வந்துள்ளனர்.

இந்தச் செயற்பாடு - யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றது.

அரங்க செயற்பாட்டுக் குழுவினருடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களும், அரங்க செயற்பாட்டாளர்களும் மக்களின் அவலம் நீக்கும் அரங்க நிகழ்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

238/1, வேலணை எனும் முகவரியை உடைய பொன்னையா சிவபாக்கியம் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## பாதிக்கப்பட்ட சைவக்குருக்களுக்கு நிதி சேகரிப்பு

அகில உலக சைவக்குருமார் சம்மேளனம் (வேதாரணிய வழி குரு பரம்பரை சைவக்குருமார் அர்ச்சகர்களின் நிறுவகம்) கிழக்கு மாகாணத்தில் கடல் அனர்த்தத்தால் பலியான சைவக் குருமார்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக நிதி சேகரித்து வழங்க முன்வந்துள்ளது.

இதற்காக பீடாதிபதி சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகருடைய கும்பத்தினரும் அமைப்பின் மூலமாகவும், தனிப்பட்ட ரீதியிலும் நிதி வழங்க முன்வந்துள்ளனர். (116)

## உழவு இயந்திர பெட்டிகள் கையளிப்பு

யாழ்.மாநகரசபையின் தேவைக்கு என வன்னி வேளாண் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 10 உழவு இயந்திரப் பெட்டிகளில் 3 பெட்டிகள் நேற்று யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டன.

ஏனைய பெட்டிகள் அடுத்த வாரமளவில் எடுத்துவரப்படும் எனவும், இதன்மூலம் குப்பை அகற்றுவதில் உள்ள சிக்கல் தீரும் எனவும் மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்தார்.

## பங்கீட்டு அட்டைக்கு மா விநியோகம்

கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லைப் பரப்புக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு நேற்று முதல் உலர் உணவு அட்டைகளுக்கு மா விநியோகிக்கப்படுகிறது.


போதியளவு எரிபொருட்கள் இருப்பதால் தட்டுப்பாடின்றி எரிபொருட்களைப் பெறமுடியும் எனவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (29)




# அலெஸ்கா ஒரு வித்தியாசமான பிரதேசம்



அலெஸ்கா என்ற பிரதேசம் உலகிலுள்ள எல்லா மக்களினதும் பார்வையைத் தன்னகத்தே திருப்பியிருக்கிறது. அங்கே காணப்படுகின்ற ஒருவகையான தரைத்தோற்றம்- கட்டடங்கள் மற்றும் வீடுகளைக் கட்டும் போது கருத்திற் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அத்துடன் அங்கே காணப்படுகின்ற எல்லா வீடுகளுமே சரிவாகவே கட்டப்படுகின்றன. ஏனெனில் அப்படியில்லாவிடின், அவை பாதிப்படையக்கூடிய வாய்ப்பிருக்கிறது. வெப்பகாலங்களில் ஒருவகையான தரைத்தோற்ற அம்சங்களும், குளிர்காலங்களில் வேறுவகையான தரைத்தோற்ற அம்சங்களும் இங்கே காணப்படுகின்றன. சாதாரணமான முறையில் கட்ட டங்கள் கட்டப்பட்டால், இலகுவில் வெடித்து மிகுந்த பாதிப்புக்குள்ளாகக்கூடிய வாய்ப்புக்கள் இங்கே இருப்பதாகக் கூறப்படுகிறது. ரயில் பாதைகள்கூட, ஓரளவு சரிவாகவே இங்கே அமைக்கப்படுகின்றன. இந்தப் பிரதேசத்தில் அடிக்கடி பூமியதிர்ச்சி ஏற்படுவதால், இங்கே கற்களினாலான கட்டடங்களைக் காண்பது என்பது அரிதாகிறது. அத்துடன் இங்கே காணப்படும் கட்டட அத்தி வாரங்களும் மிகவும் ஆழம் என்று கூறுவதற்கில்லை. இங்கே ஐஸ்கட்டிகள் அதிகம் இருப்பதால், சீமெந்துப் பாவனை மிகவும் குறை வாகவே உள்ளது.



சமீபத்திய கடற்கொந்தளிப்பால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளில் தாய்லாந்தும் ஒன்று. இங்குள்ள புக்கட் மாகாணம் சுனாமியால் சீரழிந்துள்ளது. கடல் எப்படி திடீரெனப் பொங்கியது, என்பதை இந்தப் படங்கள் காட்டுகின்றன. கடந்த 26 ஆம் திகதி காலை அமைதியாக இருந்த கடல் திடீரெனப் பொங்கியது. புக்கட் தீவிலுள்ள ஹோட்டலை நோக்கி பாய்ந்த கடலலை தரைத் தளத்தை மூழ்கடித்து மேல் தளம்வரை பாய்கிறது. இங்குள்ள ஊழியர்கள் சிலர் ஹோட்டலின் கூரை மீது ஏறி தப்பினர். ஏனையோர் அனைவருமே கடலுக்கு இரையாகினர்.

# இன்ரநெட் அரசியல்

முதல் தடவையாக இன்ரநெட் மூலம் அரசியல் விளையாட்டைத் தொடங்கலாம் என்பதற்கான சான்றுதான் அண்மையில் நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல். இரண்டு வேட்பாளர்களும் ஆளுக்கொரு வெப்சைட்டைத் தொடங்கி வைத்துக்கொண்டு, அதன்மூலம் தங்களுடைய தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டனர். முதல் தடவையாக 2004 ஆம் ஆண்டில் அரசியல் இன்ரநெட்டின் செல்வாக்கு மக்களுக்குப் புரியத் தொடங்கியது. ஜனாதிபதி புஷ் மற்றும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜோன்





கெரி ஆகிய இருவரும் தொழில்நுட்ப உலகில் மிகவும் பிஸியாக இருக்கின்ற மக்களைத் தொட்டுப் பார்ப்பதற்குரிய ஒரு கருவியாக இந்த இன்ரநெட்டைப் பயன்படுத்தினார்கள் என்பதுதான் உண்மை. சிலவேளைகளில் இவர்களுடைய தேர்தல் பிரசாரங்கள் விடியோ கேம்களில்கூட பிளாஷ் பண்ணப்பட்டன. இதன் காரணமாக மக்கள் விரும்பியோ, விரும்பாமலோ இவற்றைப் பார்க்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவர்களுடைய தேர்தல் பிரசாரத்தின் காரணமாக இந்த இன்ரநெட் மற்றும் வெப்சைட்கள் எல்லாம் அரசியல் இயந்திரங்கள் என்றே கூறப்பட்டன. அதிலும் இன்ரநெட்டினுடைய முழுச் செல்வாக்கும் அரசியலில் நுழைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# மல்டிமீடியாவுடன் மொபைல்போன்



ஐரோப்பிய நாடுகளின் சரி அரைவாசியளவுக்கு மல்டிமீடியா எனப்படும் வசதி, கையடக்கத் தொலைபேசிகளில் காணப்படுகிறது. இதன் காரணமாக ஜிபிஆர் எஸ் மற்றும் எம் எம் எஸ் எனப்படும் நவீன தொலைத்தொடர்பு வசதிகள் எல்லாம் கையடக்கத் தொலைபேசிகளில் வந்துவிட்டன. தற்போது 50% ஆகக் காணப்படும் இத்தகைய வசதி, காலப்போக்கில் 75% ஆகக் கூடும். அதாவது 2005 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த வசதியை உலகத்திலுள்ள எல்லா மக்களும் பெற்றுவிடுவார்கள் எனத் தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகின்றார்கள். ஆரம்பத்தில் ஜி பி ஆர் எஸ், 2 ஜி தொழில் நுட்பத்திலிருந்து இப்போது 3 ஜீ தொழில்நுட்பத்துக்கு மாற்றப்பட்டிருப்பதனால் இன்ரநெட் மற்றும் ஈமெயில் வசதிகளின் வேகம் அதிகரித்திருக்கிறது. இதில் விடியோ மற்றும் கமரா வசதிகளும் இருப்பதனால், மல்ரி மீடியா மெசெஜ் என்ற (எம் எம் எஸ்) வசதி மிகவும் அற்புதமாகவும், துல்லியமாகவும் வெளிப்படக்கூடயவாறிருக்கிறது. 2003 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 36 வீதமான மக்கள் இத்தகைய வசதியைப் பெற்றிருந்தார்கள். ஆனால், தற்போது ஏற்பட்டிருக்கின்ற அதிகரிப்பு உலகளாவிய ரீதியில் மல்ரி மீடியாவின் தாக்கமா? அல்லது கையடக்கத் தொலைபேசிகளின் மோகமா?


# புற்றுநோய்க்கு காந்த சிகிச்சை



புற்றுநோய்களை ஏற்கனவே கண்டுபிடிப்பதன் மூலம், அது பரவாமல் தடுக்க முடியும் எனக் கருதப்படுகிறது. ஆனால் இவ்வளவு காலமும் இருந்த அனுபவங்கள் மற்றும் வைத்தியத்துறையின் உண்மைகளின் படி, இந்த நோய் - வந்தால் இதனுடைய இறுதி முடிவு இறப்பது தான் எனக் கூறப்படுகிறது. ஆனாலும் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட சில உத்திகளின் பிரகாரம் புற்று நோய் பரவாமல் அதனை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து, இல்லாமல் செய்யக் கூடிய பல்வேறுபட்ட முயற்சிகளில் வைத்திய நிபுணர்கள் ஈடுபட்டுக் கொண்டு வருகிறார்கள். அமெரிக்காவில் ஆராய்ச்சிக் குழு ஒன்று 70 புற்றுநோயாளர்களை தெரிவு செய்தது. அவர்கள் பல தரப்பட்ட புற்று நோய்களைக் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு காந்த முறைச் சிகிச்சை என்று சொல்லப்படுகின்ற புதிய வகைச் சிகிச்சை ஒன்று அழிக்கப்பட்டு, ஆராய்ந்து பார்த்த பொழுது, அவர்களில் சிலர் நல்ல விளைவுகளைக் காட்டிய தாகக் கருதப்படுகிறது. ஆனாலும் அவர்கள் முற்று முழுதாகக் குணமாகினார்களா என்பதைக் கண்டுபிடிப்பதில் பலதரப்பட்ட சிக்கல்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் 8 வீதமான நோயாளிகள் இந்தச் சிகிச்சை முறைக்குச் சாதகமான விளைவு களைக் காட்டியுள்ளனர்.

# புதிய தொலைக்காட்டி

முன்னைய காலங்களில் நட்சத்திரங்களின் கூட்டம் அதாவது, பால்வீதிகளைக் கண்டுபிடிப்பது



என்பது மிகவும் அரிதான விடயமாக இருந்தது. ஆனால், தற்போது புதிய புதிய பால்வீதிகள் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டுவருக்கின்றன. இவற்றைப் பார்ப்பதற்கு கலெக்ஸ் என்ற தொலைக் காட்டி ஒன்று கண்டுபிடிக்கப்படிருக்கிறது. இந்தப் புதிய பால்வீதிகள் 100 மில்லியன் ஆண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட பால்வீதிகளிலும் பார்க்க, இளமையானதாகக் காணப்படுகின்றன எனக் கூறப்படுகிறது. நாஸாவால் உருவாக்கப்பட்ட இந்தத் தொலைக்காட்டி, 100 மில்லியன் டொலர்கள் பெறுமதியுடையது. அத்துடன் இவற்றிலே காணப் படுகின்ற தெளிவான மற்றும் திருத்தமான கருவிகள் மிகச் சிறிய நட்சத்திரங்களைக் கூடப்பார்க்கக் கூடிய வாறு காணப்படுகின்றன. அத்துடன் முதன் முறையாக வானத்தில் தென்படுகின்ற நட்சத்திரங்களையும், நட்சத்திரக் கூட்டங்களையும் இத்தகைய கருவி உடனடியாகவே கண்டுபிடித்து வருகிறது எனத் தொழில் நுட்பவியலாளர்கள் கூறுகின்றார்கள். இந்தக் கருவி தற்போது அமெரிக்காவில் மட்டுமே காணப்படுகிறது. ஆனால், இந்தக் கருவிகளை செய்மதிகளில் பொருத்து வதனால் மிகவும் கூடிய பால் வீதிகளைக் கண்டுகளிக்கலாம் என வும் கருதப்படுகிறது.






# காதல்

பிரமாண்டமான படங்கள் மற்றும் மெகா வெற்றிப் படங்களின் இயக்குநர் ஷங்கரின் சொந்தப் படம்தான் இது. இங்கே பிரமாண்டம் இல்லை. இந்தப் படத்தின் இயக்குநர் ஷங்கர் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. பாலாஜி சக்திவேல்தான் இயக்குநர்.

காதலர்களின் வேகமும், விவேக மும் ஒன்று சேர்ந்து எடுக்கப்பட்ட படம்தான் இது.



மதுரையில் பணக்கார ரவுடி தண்டபாணியின் மகள் சந்தியாவுக்கும் மெக்கானிக் பரத்துக்கும் காதல் வருகிறது. இருவரும் சென்னைக்கு ஓடிப்போகின்றார்கள். மதுரையில் ரவுடிகள் இவர்களைத் தேடுகிறார்கள். ஆனால் பரத்தின் நண்பர் சுகுமார் இவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கிறார். இதற்கிடையில் சந்தியாவின் சித்தப்பா எஸ்.கே.மூர்த்தி இவர்களைக் கண்டுபிடித்துவிடுகின்றார். இதற்குப்பிறகு ஊரறிய இவர்களுக்குத் திருமணம் செய்துவைப்பதாகக் கூறிக் கூட்டிவரப்படுகின்றது. அதன்பிறகு? இதுதான் கிளைமாக்ஸ் இடைவேளைக்கு முன்னர்தான் படத்தில் விறு விறுப்புக் காணப்படுகிறது.


படத்தில் வந்த எல்லாக் காட்சிகளும் பார்த்துப் பார்த்துப் பொறுக்கி எடுக்கப்பட்ட காட்சிகளாகவே தெரிகின்றன. பரத் தன்னுடைய பாத்திரத்தை நன்கு செய்திருக்கின்றார். சந்தியா தோற்றத்தில் எளிமை தெரிந்தாலும் நடிப்பு பிரமாதம். வில்லன்கள் தண்டபாணி மற்றும் மூர்த்தி தங்களுடைய வில்லத்தனத்தால் பயமுறுத்திவிட்டார்கள்.

புதுமுகம் ஜோஷ்வர் ஸ்ரீதர் இசையில் பாடல்கள் ஓரளவு கேட்கக்கூடியதாகவுள்ளன. பெரிய எடுப்பில்லாத ஒளிப்பதிவுக்காக எப்படி விஜய் மில்ட்டனைத் தோளில் தட்டலாம். அறிமுகம் ஜி.சுகுமாரின் எடிட்டிங் பொருத்தமான கட்டிங்.

"காதல்" அறிமுக வெற்றி

—மரியா.


# விமானக் கம்பனிகள் வெற்றி பெறுமா?



மிகப்பெரிய ஜம்போஜெட் எனப்படுகின்ற விமானத்தின் இஞ்சின்கள் உடனேயே தீப்பிடிக்கக் கூடியனவாக இருக்கின்றன. இதற்குக் காரணம் அதிகரிக்கின்ற வளிமண்டல வெப்பநிலைக்கேற்றவாறு, அவற்றிக்குரிய குளிர்த்திகள் இல்லை என்பது தான். இதனை நிவர்த்தி செய்வதற்கு லுப்தான்ஸா மற்றும் பிரிட்டிஷ் எயார் வேய்ஸ் இரண்டு நிறுவனங்களும் இணைந்து, 2004 இல் மிகப்பெரியளவிலான விமானத் தயாரிப்புத்திட்டம் ஒன்றைப்போட்டன. ஆனால் அவற்றைப் பெரியளவில் வெற்றியடையச் செய்ய முடியாது போய்விட்டது எனக் கூறப்படுகிறது. விமானங்களில் இன்ரநெட் வசதி என்பது மிகவும் ஆரம்பகாலத்திலே குறைவாகக்காணப்பட்டது. ஆனால், தற்போது மிகவும் ஒரு குறிப்பிட்ட விமானக் கம்பனிகளில் மட்டும் இத்தகைய இன்ரநெட் வசதிகள் காணப்படுகின்றன. லுப்தான்ஸா மற்றும் பிரிட்டிஷ் எயார் வேய்ஸ் விமானங்களில் இத்தகைய வசதிகள் மிகவும் குறைவு என்று தான் கூறவேண்டும். ஆனால், 2005 ஆம் ஆண்டளவில் இந்த இரு கம்பனிகளும் உலகளாவிய ரீதியில் விமானப் பயணங்களில் மிக உயர்ந்த நிலையை அடையவேண்டும். அத்துடன் சந்தையில் தம்முடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றன. இரண்டு கம்பனிகளும் ஐரோப்பிய நாடுகளின் கம்பனிகளாதலால் மற்றைய நாட்டுக் கம்பனிகளும் இவற்றுள் குறியாக வளரவேண்டிய தேவையிலுள்ளன.




# அப்பிளுக்கே ஆப்பு




அப்பிள் வகைக் கணினிகள் தற்பொழுது புதிய இயக்க வடிவம் ஒன்றுடன் வெளி வந்திருக்கின்றன. இது ஒ எக் எக்ஸ் ஒபரேட்டிங் சிஸ்டம் என அழைக்கப்படுகிறது. இது இன்ரநெட்டுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. அத்துடன் இந்த வகைக் கணினி மென்பொருள்-இலேசில் சட்ட விரோதமான முறையில் இன்ரநெட் பாவிப்பவர்களை விடாது எனக் கூறப்படுகிறது. இதேவேளை அப்பிள் கம்பனி - தன்னுடைய தயாரிப்புக்களைச் சட்ட விரோதமாகப் பாவிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சிகளிலும் முழு முனைப்பாக 2005 ஆம் ஆண்டிலிருந்து ஈடுபடும் எனக் கம்பனியின் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார். இது அப்பிள் கம்பனியின் தனித்துவம் பேணப்படவேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சி தான் என அடித்துக் கூறப்படுகிறது. கடந்த டிசம்பர் மாதம் 2002 ஆம் ஆண்டு சட்டபூர்வமற்ற முறையில் அப்பிள் கம்பனியின் எல்லா விதமான தொழில் நுட்பங்களும் பவர் மக் ஜி 4 கணினி ஒன்லை மூலம் விநியோகம் செய்யப்பட்டு. இதன் காரணமாகக் கம்பனிக்குப் பெரியளவில் நட்டம் ஏற்பட்டதன் காரணமாகத் தான் இத்தகைய முயற்சிகள் நடைபெறுகின்றன எனக் கூறப்படுகிறது.

# தட்டையான திரையையுடைய ரீவிக்கள் அவுட்



இப்போது எல்லா வீடுகளிலும் தட்டையான திரையையுடைய தொலைக்காட்சிப் பெட்டி களே பெரும்பாலும் காணப்படுகின்றன. இத்தகைய தொலைக்காட்சிப் பெட்டிகள் மனிதர்களுடைய உடலில் நோய்கள் வரக்கூடிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் இந்தத் தட்டையான தன்மைக்குப் பாவிக்கப்படுகின்ற ஒரு வகையான உலோகம் தான். இந்த உலோகம் - மனிதர்களின் உடலுக்குத் தீங்கு தரக்கூடியது எனக் கூறப்படுகிறது. இதேவேளை 30 வயதையுடைய ஒருவர் இந்தத் தொலைக் காட்சியைத் தொடர்ந்து கண்டுகளிப்பதனால், நுரையீரல் வியாதிக்குட்பட்டிருக்கின்றார்.

இந்த நிலை தொடர்ந்தால், உலகளாவிய ரீதியில் இத்தகைய தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தடை செய்ய வேண்டிவரும் எனக் கூறப்படுகிறது. மனிதர்கள் மூச்சு விடும் பொழுது இந்த வகை உலோகம் மூச்சுக்குழல்களில் சிறு பாதிப்பை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது. ஐரோப்பாவில் சொனி கம்பனியின் தட்டையான தொலைக்காட்சிப் பெட்டிகளை சந்தையிலிருந்து விற்பனையாளர்கள் விற்பதைக் குறைத்துக்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. இதேவேளை தட்டையான உலோகத்துக்குப் பதிலாக வேறு ஏதாவது பாவிக்க முடியுமா எனத் தொழில் நுட்பவியலாளர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

# பறக்கும் கார்



நாளுக்கு நாள் கார்கள் மற்றும் வாகனங்களுடைய இஞ்சின்களில் மாற்றம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. கார் நிறுவனங்களிடையே போட்டி – புதிய புதிய எஞ்சின்களைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு தூண்டுகோலாக அமைகிறது. தற்போது கடலிலே பாவிக்கப்படுகின்ற ஸ்டீம் பவர் இஞ்சின் போன்று ஒன்று கார்க் கம்பனிகளால் தயாரிக்கப்பட இருக்கிறது. இந்த இஞ்சின் ஓரளவுக்கு 21 ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த எஞ்சின் என்ற பெயரைப் பெறும் எனக் கருதப்படுகிறது. இத்தகைய ஸ்டீம் காரினுடைய நீளம் 5.25 மீற்றரும், அகலம் 1.7 மீற்றரும், உயரம் 1.1 மீற்றரும் உடையது. இது திரவப் பெற்றோலிய வாயு (எல்.பி.ஜி) இனால் இயங்கக்கூடியது எனக் கருதப்படுகிறது. இதனுடைய அதியுன்னத வேகம் மணிக்கு 320 கிலோமீற்றர் என்று கூறப் படுகிறது. இதனுடைய ஆர்முடுகல் திறன் 0.52 ஜி ஆகவும் காணப்படுகிறது. இதிலே காணப்படுகின்ற பிரேக்குகள் மிகவும் வித்தி யாசமானதாகக் காணப்படுகின்றன. அதிலும் முன், பின் பிரேக்குகள் டிஸ்க் பிரேக் சிஸ்டம் கொண்டனவாகவும் உள்ளன. தற்போதுள்ள கார்களுள் இதுதான் மிகவும் வேகம் கூடியது எனத் தொழில்நுட்பவியலாளர்களால் ஒத்துக்கொள்ளப்படுகிறது. இதிலே காணப்படுகின்ற இஞ்சின்கள் சிறிய வகை விமானங்களை ஒத்ததுபோலக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

# ஈரல்நோய்க்கு மருந்து

குடி குடியைக் கெடுக்கும் என்பது போல, குடி ஈரலை அழிக்கிறது என்பது யாவருமறிந்த விடயம். ஆனால், குடித்துக் கொண்டிருக்கின்ற பொழுதே ஈரல் அழிவதைத் தடுக்க முடியும் என்ற ஆய்வுகளில் தற்போது ஐரோப்பிய விஞ்ஞானிகள் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக்கொண்டு வருகின்றார்கள். உண்மையில் ஈரலில் காணப்படுகின்ற புரோட்டின் படை இல்லாமல் போவதனால்தான், ஈரல் அழிகின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஈரலில் ஏற்படுகின்ற இந்த நோயை சிற்கோஸிஸ் எனக் கூறப்படுகிறது. இந்த நோயின் மூலம் ஒவ்வொரு வருடமும் 4 ஆயிரம் பேர் வரை



இறக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது. 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் குறைவாக இருந்த இந்தநோயின் தாக்கம், தற்போது கூடுதலாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்போது ஈரலைப் பாதுகாக்கும் சிகிச்சை முறைகளில் மருத்துவவியலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பதையிட்டு 'குடி' மக்கள் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். கெப்பட் டிட்டிஸ் சி என்ற, ஈரல் நோய்க்கான மருத்துவ குணமாக்கலை அவர்கள் குடிக்கின்ற அற்ககோலின் அளவிலேயே தங்கியிருக்கிறது என மருத்துவவியலாளர்கள் கருதுகின்றார்கள். 50வீதமான மக்கள் இப்போது ஐரோப்பாவில் குணமாகி இருக்கிறார்கள் எனவும் கூறப்படுகிறது.

# வெளிநாட்டு தூதுவர்களையும், ஊடகவியலாளர்களையும் வன்னி மாவட்டத்துக்கு அழைத்துச்செல்ல பகீரத முயற்சி!

(கிளிநொச்சி)

வன்னப்பிரதேசத்தின் அழிவுகளைக் காண்பிக்க வெளிநாட்டுத் தூதுவர்களையும் சர்வதேச ஊடகவியலாளர்களையும் அழைத்துச் செல்ல தமிழ் பிரமுகர்களும், சில முக்கிய தமிழ் அமைப்பு பிரதிநிதிகளும் பகீரத முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் முல்லைத் தீவு மாவட்டமே கடற்கொந்தளிப்பால் பெரிதும் நிர்மூலமாக்கப்பட்டு, பெரும் அழிவுகளை சந்தித்துள்ளது. இங்கு 22 ஆயிரம் மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். 1666 பேர் பலியாகியும் 2 ஆயிரத்து 750 பேர் காணாமல் போயுள்ளனர். 1370 பேர் காயமடைந்துள்ளனர் என, அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் தாம் மீண்டும் கரையோரத்தில் வாழ விரும்பவில்லை. அனர்த்தத்தை நேரில் கண்டவர்கள் அதிலிருந்து இன்னமும் மீட்சி பெறவில்லை.

எங்களை வாழவைத்த கடல் எங்கள் உறவுகளை அள்ளிச் சென்றது என அவர்கள் மன வேதனையுடன் கூறுகின்றனர். மீண்டும் கடல் கொந்தளித்து விடுமோ என்ற அச்சவுணர்வு மக்கள் மத்தியில் இருக்கிறது.

# கடல்கொந்தளிப்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் உதவிகள்

(வுவுனியா)

சுனாமி கடற்கொந்தளிப்பில் உயிரிழந்த பாடசாலை மாணவர்களுக்காக நேற்றுமுன்தினம் வவுனியா விபுலானந்த வித்தியாலயத்தில் தீபங்கள் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டது.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களையும், சீருடைகளையும் பெற்றுக்கொடுக்க சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

வனனிப் பிரதேசத்தில் சுனாமி கடல் கொந்தளிப்பின் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கைகொடுத்து உதவுமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.





## நாட்டுப்பற்றாளர் சாவடைந்தார்

கடந்த 26ஆம் திகதி முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுப்பற்றாளர் நிக்ஷன்.

நிரந்தர முகவரி:நாரந்தனை, ஊர்காவற்றுறை.

தற்காலிக முகவரி: 155ம் கட்டை, கிளிநொச்சி என்பவரே சாவடைந்தவராவார்.

# இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நோயாளிகள்

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகள் மருத்துவமனைகளிலும் மற்றும் நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களுக்கான மருத்துவ சேவையை 14 வைத்தியர்களும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் 30 பேரும் சேவையாற்றி வருகின்றனர்.

மருத்துவமனை, நலன்புரி நிலையங்களில தங்கியிருந்து சிகிச்சைபெறுவோர் தொகை விபரததை- கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ளார். இதன்படி-

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 146 பேரும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 558 பேரும், தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் 187 பேரும் மற்றும் பளை மத்திய கல்லூரியில் தங்கவைக்கப்பட்டுள்ள நோயாளர்கள் உட்பட மொத்தம் 6 ஆயிரத்து 680 பேரும், இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 225 பேரும், சோரன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 164 பேரும், புலோப்பளை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் ஆயிரத்து 32 பேரும், கோவில்வயல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 193 பேரும், தர்மக்கேணியில் 389 பேரும், முகாவிலில் 210 பேரும், மாசாரில் 222 பேரும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 123 பேரும்,, பளை வைத்தியசாலையில் 16 பேரும், தர்மபுரம் மத்திய மருந்தகத்தில் 14 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குன்றும் குழியுமாகக் காணப்படும் சேமமடுபடிவல்லை பகுதி வீதி

(வவுனியா)

வவுனியாப் பிரதேசத்தின் சேமமடு படிவல்லை பகுதியிலுள்ள வீதிகள் படுமோசமான நிலையில் சேதமுற்றுக் காணப்படுவதால், இந்தப்பகுதி மக்கள் பெருஞ சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேசசபையின் கீழ் உள்ள இந்த வீதிகள் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமையால், பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன், தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாகக் குழிகளில் நீர் நிரம்பி, சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது. இதனால் இந்த வீதியூடாகப் பயணம் செய்யமுடியாத நிலை உள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கருத்திற் கொண்டு, இந்த வீதிகளைப் புன ரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.



சுனாமி கடற்கொந்தளிப்பால் வெற்றிலைக்கேணி கிறிஸ்தவ தேவாலயத்தின் தெற்குப் பக்கம் சேதமடைந்து இருப்பதைப் படத்தில் காணலாம்.

# வவுனியா நகர்ப்பகுதி உணவகங்களில் சுகாதார நிலைமை மோசமான நிலையில்

வவுனியா நகரசபை கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா நகர்ப்பகுதி உணவகங்கள், விடுதிகள் எனபவற்றில் மிகமோசமான சுகாதாரச் சீர்கேடுகள காணப்படுகின்றன.

இது தொடர்பாக வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் -

நகரசபையால் எமக்கு எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்படவில்லை. கடந்த ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி மாவட்ட செயலாளர் தலைமையில் இடம்பெற்ற ஒன்றுகூடலில், எழுத்து மூலமான அதிகாரத்தை உடனடியாக வழங்கவேண்டும் என்று பணிககப்பட்டும், இதுவரை எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்படவில்லை.

இந்தப் பகுதியில் தற்போது நெருப்புக் காய்ச்சல் நோய் மிக மோசமாகப் பரவி வருவதால், அதைத் தடுப்பதற்காகக் கடந்த டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி தற்துணிவின் அடிப்படையில் உணவகங்கள, விடுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டன.இது தொடர்பாக வவுனியா நீதிமன்றில் வழக்குத் தொடரப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

## வவுனியா மாவட்டத்தில் 600 குடும்பங்கள் தஞ்சம்

இயற்கையின் சீற்றம் இன்னும் தொடரலாம் என்ற அச்சத்தால் பலமாவட்டங்களில் இருந்தும் இடம்பெயர்ந்து, வவுனியா மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ள 600 குடும்பங்கள் 5 பராமரிப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்று சேர்ந்து அவர்களுக்கான அடிப்படை வசதிகள் மேலதிக உணவுகள், மற்றும் அத்தியாவசிப் பொருட்களான மருந்து வகைகள், உடைகள், குழந்தைப் பராமரிப்பு பொருட்கள், அடிப்படை சுகாதார வசதிகள், நோயால் பாதிக்கப்படுபவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுதல் போன்ற உதவிகளை இரவு, பகல் பாராது செயற்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் மன்னாரிலிருந்து அச்சம் காரணமாகத் தஞ்சம் புகுந்துள்ள 600 குடும்பங்களுக்கான அடிப்படைத தேவைகளையும், ஏனைய மனிதாபிமான உதவிகளையும் மேற்கொண்டு அவர்களைப் பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அனுமதி வழங்குமாறு ஜனாதிபதி கோரிக்கை

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிப் பகுதியில் சுனாமி அலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்ற அனுமதி வழங்குமாறு ஜனாதிபதி விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சர்வதேச யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் ஊடாக நேற்று முன்தினம் விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதிச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்குத் தயாராக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் இந்திய அரசின் நிவராணப் பொருட்கள் அரசாங்கத்தினூடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுனாமி கடற்கொந்தளிப்பால் முல்லைத்தீவு பிரதேசத்தில் கடந்த இரு, தினங்களுக்கு முன்னர் மீட்புப் பணியில் ஈடுபட்ட தொண்டர்களால் மீட்கப்பட்ட குழந்தையின் சடலத்தைப் படத்தில் காணலாம்.

# கடற்தொழில் உபகரணங்கள் முற்றாகவே அழிந்துள்ளன!

(முல்லைத்தீவு)

தமிழர் தாயகப் பகுதியைத் தாக்கிய கடற்கொந்தளிப்பினால் மூலம் முல்லைத்தீவிலுள்ள 12 கிலோ மீற்றர் நீளமான கரையோரப் பகுதிகளிலும், 18 கிலோ மீற்றர் நீளமான வடமராட்சிக் கரையோரப் பகுதியிலும் வாழ்ந்து வந்த 32 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களில், 4ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர்.

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வட்டுவாகல் முதல் செம்மலை வரையான பகுதிகளிலிருந்து 17 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களில், 3ஆயிரத்து 300இற்கும் அதிகமான மக்கள் உயிரிழ்ந்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் கடற்தொழிலில் ஈடுபட்ட ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட இயந்திரப் படகுகளில் 14படகுகள் மட்டுமே எஞ்சியுள்ளன. ஏனைய படகுகள் யாவும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இதைவிட 18 கிலோமீற்றர் நீளமான கரையோரப் பிரதேசங்களில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்தனர். இவர்களில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன் ; பெருமளவான கடற்தொழில் உபகரணங்களும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.



சுனாமி கடற்கொந்தளிப்பால் முற்றாக அழிவுக்குள்ளான முல்லைத் தீவு தபாலகத்தைப் படத்தில் காணலாம்.

படம்: கனகரவி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு.
திருக்குறள்

# நமது நோக்கு

## படை உதவி தேவையா?

சுனாமி கடற்கொந்தளிப்பால் இலங்கைத் தீவில் முன்னெப்போதும் இல்லாத பேரழிவு நிகழ்ந்திருக்கிறது. சிறியதொரு நாடான இலங்கையால் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்கு சேதங்கள், இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தப் பேரழிவிலிருந்து இலங்கை மக்களுக்கு உதவிகளைச் செய்து காப்பாற்றுவதற்காக உலகெங்கும் இருந்து உதவிகள் குவிந்து கொண்டிருக்கின்றன.

இயற்கைப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணமாக, பொருளாக, மருந்துகளாக பல்வேறு நாடுகளும் உதவிகளை அனுப்பிக் கொண்டிருக்கின்ற சூழலில் மேலும் சில நாடுகள் படைகளையும் போர்க் கப்பல்களையும் அனுப்பிவருகின்றன.

மீட்பு, உதவிப் பணிகளுக்கென அமெரிக்கா 1500 துருப்புக்கள், 20 ஹெலிகொப்ரர்களுடன் ஒரு விமானம் தாங்கிக்கப்பலை அனுப்பியுள்ளது.

இந்தியா ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினருடன் ஏழு போர்க்கப்பல்களை அனுப்பிவைத்துள்ளது. இந்த நாடுகளின் போர்க்கப்பல்கள் இலங்கை செல்வதை அறிந்ததும் பாகிஸ்தானும் போட்டிக்கு இரண்டு கப்பல்களை அனுப்பியிருக்கிறது. இது போதாதென்று பிரிட்டனும் ஒரு போர்க் கப்பலை அனுப்பியுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையை நோக்கி தமது போர்க் கப்பல்களையும் படையினரையும் குவிக்கத் தொடங்கியிருப்பதன் பின்னணி – தனியே உதவி, மீட்புப் பணிகள் தானா என்ற சந்தேகத்தையே தோற்றுவிக்கின்றது.

முதலில் இந்தியா உதவிக்கென போர்க் கப்பல்களை அனுப்பியது. பின்னர்தான் அமெரிக்கா, பாகிஸ்தான் என்று படைகளை நிலைப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளன.

தெற்காசியாவில் தமது படைகளை வலுப்படுத்தி, நிலைப்படுத்த முயலும் நாடுகள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்கின்றனவா என்ற சந்தேகத்தை தோற்றுவித்திருக்கின்றது.

உதவி, மீட்புப் பணிகளை படைகளைப் பயன்படுத்தித்தான் மேற்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

அப்படியிருக்கும்போது ஆயிரக்கணக்கான படையினரை ஒவ்வொரு நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு அனுப்புவதும் அதிநவீன போர்க் கப்பல்களை இலங்கைக் கடற்பரப்புக்கு நகர்த்துவதில் ஈடுபாடு காட்டப்படுவதிலும் உள்நோக்கம் இல்லாமல் இல்லை.

உதவிப் பணிக்கென வெளிநாட்டுப் படைகள் தொடர்ந்தும் குவிக்கப்பட்டுவருகின்ற அதேவேளை இந்தப் படைகள் மூலம் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் என்னவென்பது பற்றியோ இதன் ஒருங்கிணைப்புத் தொடர்பாகவோ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

அவசர மீட்புப் பணிகள் முடிவடைந்த பின்னர் இங்கு கொண்டுவரப்படவுள்ள ஆயிரக்கணக்கான படையினர், மீள்கட்டமைப்புப் பணிகளில் ஈடுபடுத்தப் படவிருப்பதாக தகவல் ஒன்றும் உள்ளது.

அப்படி மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளில் அமெரிக்கா போன்ற நாடுகளின் துருப்புக்கள் பயன்படுத்தப்படுமானால் அது நீண்டகால நிலைகொள்ளலாகவே இருக்கும்.


எந்தக் காலவரையறையும் இல்லாமல் இவ்வாறு வெளிநாட்டுப் படைகள் இங்கு கொண்டுவரப்படுவது இலங்கைக்கு எதிர்காலத்தில் கடும் சிக்கல்களை ஏற்படுத்தலாம். அதைவிட இந்த இயற்கைப் பேரழிவால் தெற்காசியாவில் ஆயுதப்போட்டியை வலுப்படுத்துகின்ற அச்சமும் உருவாகியிருக்கிறது. அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல் காலியில் நிலைகொள்ளும்போது நிச்சயமாக அது இந்திய நலனுக்கு விரோதமாகவே அமையும்.

இப்படி உள்நாட்டிலும் பிராந்திய ரீதியிலும் சிக்கல்களைத் தோற்றுவிக்கக் கூடியதாகவே வெளிநாட்டுப் படைகளின் வருகைகள் கருதப்படுகின்றன.

ஏற்கனவே இடியப்பச் சிக்கலாக இருந்துவரும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இந்த வெளிநாட்டுப் படைகள் மேலும் சிக்கல்களை ஏற்படுத்தாது என்று எந்தவகையிலும் எதிர்பார்க்க முடியாது.

தெற்காசிய படைவலுச் சமநிலையில் குழப்பங்களைத் தோற்றுவிக்கும் இத்தகைய நகர்வுகளுக்கு ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளி வைக்கப்படாவிடின் வல்லரசுகளின் கைகளில் இந்தச் சிறிய நாடு சிக்கிச் சீரழிவதைத் தடுக்கமுடியாது.

# நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# பிச்சைவேண்டாம் (அமெரிக்காவை) நாயைப்பிடி!

ஒரு பிச்சைக்காரன் வீட்டுக்கு வருகிறான். வீட்டுக்கு வெளியே நின்ற நாய் அவனைப் பார்த்துக் குரைக்கிறது. அவன்மீது பாய்ந்து கடிக்க எத்தனிக்கிறது. அவன் கத்துகிறான் 'பிச்சை வேண்டாம் அம்மா நாயைப்பிடி!'.

இது பல இடங்களிலும் நடக்கும் சம்பவம்தான். இன்று இலங்கையில் இதற்கு எதிர்மாறான சம்பவம் நடந்து கொண்டிருக்கிறது.

இயற்கையின் அனர்த்தத்தினால் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கணப்பொழுதில் பேரலைகளில் சிக்கி மாண்டு போனார்கள்.

பிஞ்சுகள் முதல் பெரிசுகள்வரை குடும்பம் குடும்பமாக அடையாளம் தெரியாமல் அலைகளுக்குப் பலியாகிவிட்டார்கள். மக்கள் வாழ்நாள் முழுக்க உழைத்துத்தேடிய பொருட்கள் அழிந்து போய்விட்டன.

உயிர்தப்பியவர்கள் உண்ண உணவின்றி உடுக்கத் துணியுமில்லாமல் நிர்க்கதியாக நிற்கின்றனர்.

அழிவுக்குத் தப்பியவர்களும், அயலிலுள்ளவர்களும், தூரத்திலுள்ளவர்களும் இந்தப் பேரழிவு பற்றிய செய்திகள் கிடைத்ததும் உதவிக்கு ஓடிவந்தனர்.

சிறுபிள்ளைகள் முதல் பெரியோர் வரை தங்களால் இயன்றதை, தங்களிடம் இருந்ததை நிர்க்கதியாக நிற்கும் மக்களுக்கு உதவுவதற்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவற்றைப் பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதில் மிகச் சிரமத்துடன் உதவிக்கு உடனடியாக ஓடிச் சென்றவர்கள் பங்கிட்டுக்கொடுத்து அவர்களுக்கு ஆறுதலும் கூறி உதவிசெய்து கொண்டிருந்தார்கள்.

உடனடித் தேவைகள் பெருமளவில் பெரும் சிரமத்துடன் நிறைவேற்றப்பட்டுவருகின்றன.

இந்தச் சமயத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய பொருட்களை உணவு, உடைகள், அழிந்து போன உறைவிடங்களுக்குப் பதிலாக புதிய இல்லங்கள், உறைவிடங்கள், அலைகள் அள்ளிச்சென்ற தொழில்செய்வதற்கான கருவிகள், தொழிற்சாலைகள் மற்றும் சாதனங்கள், தொழில் செய்வதற்கான மூலப்பொருள்கள், அவற்றைப் பெறுவதற்கான முதலீடுகள் இவற்றையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

மக்கள் புதிய வாழ்வைத் தொடங்குவதற்கான எதிர் பார்ப்புடன் தாங்கள் இழந்தவைகளின் துயரத்தை சற்று மறந்து இனிப்பிழைப்புக்கு வழிதேடும் வழியை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இந்தச் சமயத்தில் இயற்கை அனர்த்தத்தில் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாக நிற்கும் மக்களுக்கு உதவ போர்த் தளபாடங்களுடன், போர்ப் படையுடன் அமெரிக்க வல்லரசு பாரிய போர்க்கப்பலை இலங்கைக்கு அனுப்புகிறது.

எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாக நிற்கும் அப்பாவி மக்களுக்குப் போர்ப்பயிற்சியளிப்பதற்காக இவை இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறதா?

நாட்டையே நாசப்படுத்திச் சென்றுவிட்ட சுனாமி பேரலைகளுடன்போர் செய்வதற்காக இந்தப் போர்க்கப்பல் வந்திருக்கிறதா?

இந்தப் போர்க்கப்பல் இலங்கை அரசின் அனுமதியில்லாமல் இங்கு வந்திருக்கமுடியுமா?

அமெரிக்கப் போர்க்கப்பல் போதாதென்று அதன் நட்புக்குரிய பாகிஸ்தானும் போர்க்கப்பல்களை அனுப்புகிறது.

இலங்கைக்கு இப்போது இந்தப் போர்க்கப்பல்கள் எதற்காக வருகின்றன.

இயற்கையின் அனர்த்தத்தினால் இலங்கை அரசுக்கும் இலங்கையின் பாதுகாப்புப் படைகளுக்கும் ஏற்பட்ட இழப்புக்கள் எத்தகையவை என்பது பற்றி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மக்களுக்கு எடுத்துச் சொன்னதைவிட கடற்புலிகள் பெரும்பாலும் பேரலைகளால் அழிந்துவிட்டனர். விடுதலைப் புலிகளுக்குத்தான் பெரும் நஷ்டம் என்று சொல்வதுதான் அதிகம்.

மீண்டும் ஒருபோர் இப்போதைக்குத் தொடங்கப்படமாட்டாது என்று தெரிவித்த சந்திரிகா அம்மையார் இதற்கு இயற்கை அனர்த்தத்தினால் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பே காரணம் என்று கூறியிருப்பதையும் கவனிக்கவேண்டும்.

நாட்டில் இனத்தாலும், மொழியாலும், மதத்தாலும் பல்வேறு வகையிலும் பிரிந்து கிடந்த மக்களை இயற்கை இன்று எல்லாவற்றையும் மறந்து ஒருவருக்கொருவர் ஓடிச்சென்று உதவும் வகையில் ஒன்று சேர்த்திருக்கிறதென்று தென்னிலங்கையில் சில புத்திஜீவிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

சந்திரிகா - அம்மையாரும்கூட நாட்டு மக்கள் தமக்கிடையே உள்ள பேதங்களை மறந்து ஒன்றுசேர்ந்து நாட்டைப் புதிதாகக் கட்டியெழுப்ப முன்வரவேண்டுமென்றுகூடச் சில சமயங்களில் சொல்கிறார்.

புனரமைப்புப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் இணைத்துச் செயற்படப்போவதாகவும் சொல்கிறார்.

இயற்கை அனர்த்தம் தமிழர் தாயகத்தில் தனது கொடிய அலைகளால் ஆயிரக்கணக்கில் மக்களைப் பலியெடுத்தும், பல்லாயிரக்கணக்கானவர்களை அநாதைகளாக்கி நிர்க்கதியாக்கியது.

இந்த அவலம் நிகழ்ந்த மறுகணமே பாதிக்கப்பட்ட மக்களின் உதவிக்கு விடுதலைப் போராளிகளை எந்தப்பாகுபாடும் பாராமல் பணியாற்றுவதற்கு அனுப்பியவர் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்

சிங்கள ஊடகங்களும், சிங்கள அரசியல்வாதிகள் சிலரும் என்னதான் பொய்ப்பிரசாரம் செய்தபோதும் ஆபத்தில் உதவியைப்பெற்ற சிங்கள, இஸ்லாமிய, தமிழ் மக்கள் அதை மறக்கவும் முடியாது. மறைக்கவும் முடியாது.

அனர்த்தம் நிகழ்ந்த 24 மணி நேரத்துக்குள் விடுதலைப் புலிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை விரைந்துசென்று அளித்தனர்.

இதைத் தொடர்ந்து அழிந்து போனவற்றைப் புனரமைக்கவும் மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும் தமிழர் தாயகப் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலர்கள், அரச அதிகாரிகளையும் கொண்ட செயலணிக்குழுவையும் அமைத்துச் செயற்படுவதற்கான திட்டங்களையும் வகுத்துவருகின்றனர்.

இதன்பின்னர்தான் அரசாங்கம் ஒரு செயலணிக்குழுவை அமைத்து அதில் விடுதலைப் புலிகளும் பங்குபற்ற வேண்டுமென்று அழைப்பு விடுத்தது.

அரசாங்கம் உடனடியாகச் செய்யவேண்டிய கடமைப் பொறுப்பை விடுதலைப்புலிகள் தமது தாயகத்தில் நிறைவேற்றி விட்டனர். இனி புனர் கட்டுமானப் பணிகளுக்கு அரசுதான் உதவிக்கு வரவேண்டும், வெளிநாடுகளும் வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் திட்டமிட்டமுறையில் ஆபத்திலும் ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் செயல்படுவார்களென்பதை உலக நாடுகள் புரிந்து உதவியளிக்க முன்வந்தால் அனர்த்தத்தால் ஏற்பட்ட அழிவுகளின் சுவடுகள் தமிழர் தாயகத்தில் விரைவில் நீங்கிவிடும்.

இந்தியாவும் - இலங்கைக்கு உதவுவதற்கு ஐந்து போர்க் கப்பல்களை அனுப்பியது. மேலும் இரண்டு கப்பல்களை அனுப்பியிருக்கிறது.

இயற்கை அனர்த்தத்தால் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கு எண்ணற்ற சேதம் ஏற்பட்டது, விடுதலைப்புலிகளின் படைப்பலம் பாதிக்கப்பட்டது பற்றியே இலங்கை அரசும், புலனாய்வுப் பிரிவும், சிங்கள ஊடகங்கள் சிலவும் அக்கறை காட்டி ஆராய்ந்துகொண்டிருக்கின்றன.

ஆனால் இயற்கை அனர்த்தத்தால் இலங்கை இராணுவம் பெரும் அழிவுகளைச் சந்தித்திருப்பதாகவும், மீளக்கட்டியெழுப்புவது அரசுக்குப் பெரும் சவாலாக இருக்குமெனவும் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் சண்டேரைம்ஸ் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

ஏற்கனவே வேறு காரணங்களால் இராணுவம் பலவீனமாயிருந்ததென்றும் இந்த அனர்த்தத்தால் கடற்படைக்கும் பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் எழுதுகிறார்.


இந்த நிலையில்தான் அமெரிக்க போர்க்கப்பல் ஆயுதப் படைகளுடன் இலங்கை வந்திருப்பதும், பாகிஸ்தான், இந்தியப் போர்க் கப்பல்கள் வந்திருப்பதுவும் அச்சத்தையும் ஐயத்தையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

'பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்று பிச்சைக்காரன் கத்துவதற்கு மாறாக பிச்சைபோடுபவர்களைப் பார்த்து உதவி என்ற பெயரில் வந்தவர்களை' பிச்சை வாங்குபவர்கள்தான், 'பிச்சை வேண்டாம் நாயைப்' - பிடி என்று கத்தவேண்டியிருக்கிறது. இவர்கள் திரும்பப் போகும்வரை உரக்கக் கத்த வேண்டியிருக்கும்.

வாரநோக்கு

யாழவன்

# பொறுமையாக அலைந்து திரிந்த கடலலைகள் பொங்கியெழுந்து பலரை பலிக்கடாவாக்கியது



போன்ற சர்வதேச சமூகம் வழங்கும் உதவிகளையும் இனவாத நோக்குடன் தட்டிச்சுத்த அரச இயந்திரம் தயாராகவே இருக்கிறது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை உலகம் உணர்ந்து வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியிலே வலுமிக்க இடைக்கால நிர்வாகம் ஒன்று உருவாக்கப்படுதலிலே அதிக அழுத்தத்தை அரசுக்கு பிரயோகிக்க வேண்டும்.

மக்களின் துன்பத்தையும், துயரத்தையும் தமது அரசியல் வியாபாரமாக்க முனையும் சக்திகளைக் கொண்ட அரசினால், நிச்சயமாக வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியை பொருளாதார ரீதியாக மீண்டும் மீட்டெடுக்க முடியாது. எனவே அந்தப் பணியை அந்தப் பிரதேசத்தின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ள விடுதலைப்புலிகள் வசம் வழங்கிவிட வேண்டும். இது கௌரவ

நாட்டின் முழு வளத்தையும் பயன்படுத்த வேண்டியுள்ளதால், யாருக்குமே உபயோகமற்ற போர்த் தயார்படுத்தலுக்கும், படைப்பலப் படுத்தலுக்குமாகச் செலவிடப்படும் தொகையை இயற்கை அனர்த்தத்திலிருந்து மீள்வதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இதுவரை காலமும் இலங்கை பூமியதிர்ச்சி ஏற்படும் எல்லைகளுக்கு அப்பாலேயே அமைந்துள்ளதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் தற்போது சுமாத்திராத் தீவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் விளைவு கொழும்பிலே வெள்ளவத்தையிலும் உணரப்பட்டுள்ளது. இது எதிர் காலத்திலே இலங்கை பூமிய திர்சசி அபாயத்துக்கு உள்ளாகும் நிலைககு ஆரம்ப அறிகுறியாகும். இவ்வாறானதொரு நிலை - இலங்கைக்கு ஏற்படுவதற்குக் காரணம் திட்டமிடல்களற்ற முறையிலே உரிய ஆய்வு முடிவுகள் எதுமின்றி அடுக்கடுக்

மாக இல்லாவிடினும், இலங்கையைப் பொறுத்தவரையிலே மிகவும் மோசமானதேயாகும். இது இலங்கையின் இரண்டாவது கடல்கோள் ஆகும். முன்னர் துட்டகைமுனு மன்னனுடைய தாயினுடைய தகப்பனார் கல்யாணி தீசனுடைய காலத்திலே இவ்வாறானதொரு அழிவு ஏற்பட்டு, நிலப்பரப்பினுள் ஏராளமானது கடல்கொண்டு போனதாக வரலாறு சொல்கிறது. இதைவிட இந்தியாவிலே இருந்த காவிரி பூம்பட்டினமும், கடல்கோள் மூலமாக அழிவடைந்ததாகப் புவியியலாளர்களின் ஆராய்ச்சிகளின் முடிவாக அறியப்பட்டுள்ளது.

ஆனாலும் உலக வரலாற்றைப் பொறுத்தவரையிலே இலங்கைத் தீவிலே தற்போது ஏற்பட்டுள்ள அழிவிலே, இதுவரை நடந்தவற்றுள் இது மிகப்பெரிய அழிவாகும். ஒரே நாளிலேயே முப்பதினாயிரத்துக்கும் அதிகமானோரைக் கடல்

துயரம் தோய்ந்த நினைவுகளை வரலாற்றில் அழியாத நினைவுச் சுவடுகளையும் தந்துவிட்டு, இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு கடந்து சென்றிருக்கிறது. பொறுமையாய்க் கிடந்த கடல் பொங்கியெழுந்து பலரைப் பலி கொண்டு, பொருளாதார முதுகெலும்பையும் ஒடித்து, தன் பசியைத் தீர்த்துக் கொண்டுள்ளது. உறவுகளை இழந்தவர்களும், உடைமைகளை பறி கொடுத்தவர்களும் என எங்கும் அவலக் குரல்களும், அனுதாப அலைகளும் எழும் சோகமயமான வாரமாகக் கடந்த வாரம் மட்டுமல்ல, கடந்த வருடமும் அமைந்துள்ளது.

இயற்கையின் போக்கை தன் சக்தி கொண்டு அடக்க முற்படும் மனிதனுக்கு இயற்கையின் சீற்றம் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையிலே சாதி, மத, இன வேறுபாடின்றி அனைவருமே இந்த அனர்த்தத்தால் பாதிப்படைந்துள்ளனர். யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? யாரைப் பார்த்து யார் அழுவது? என எல்லோருமே "சுனாமி" அலையின் கோரப்பசிக்கு இலக்காகியிருக்கிறார்கள். நாடு முழுவதிலுமுள்ள மக்கள் அனைவருமே உணர்வு ரீதியாகப் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர்.

இருபது வருட காலமாக நடைபெற்ற போரின் மூலம் ஏற்பட்ட அழிவை விட, இருபது நிமிட நேரத்தில் நடைபெற்ற கடற்கொந்தளிப்பு பாரிய அழிவை ஏற்படுத்தியுள்ளது. அதிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசமே மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. பொருளாதார ரீதியாகப் பாரிய பின்னடைவை எதிர்கொண்டுள்ள தமிழர் தாயகம் - அந்தப் பாதிப்பிலிருந்து மீள்வதற்கு நீண்ட காலம் நிச்சயமாகத் தேவைப்படும். இதற்கு அரச, சர்வதேச நிதியுதவிகள் தாராளமாகத் தேவைப்படும். இந்தத் தேவையை உணர்ந்து அரசும், சர்வதேச நாடுகளும் உரிய முறையிலே தமது உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.

ஆனால் ஆட்சியிலுள்ள அரசின அசமந்தப்போக்கும், அசட்டைத் தனமும், அக்கறையீனமும் தமிழர் தாயகப பிரதேசங்களைப் புறக்கணிக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளன. இதனால் அரசு மீது அளவற்ற வெறுப்புக் கொண்டுள்ள தமிழ் மக்கள் தமது எதிர்ப்பை பிரதமரின் குடாநாட்டுக்கான விஜயத்தின் போது தெளிவாக வெளிப்படுத்தியிருந்தனர். இதுவரை காலமும் சமாதான விரோதிகளாகச் செயற்பட்டு, தமிழ் மக்கள் நலன்களில் அக்கறை ஏதுமின்றியிருந்த அரசு, சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள இயற்கை அழிவின் போது தமிழர் தாயகப் பகுதிகளுக்கு விஜயங்களை மேற்கொண்டு வெறும் வாய்மொழி வாக்குறுதிகளை மட்டும் வழங்கி, அரசியல் லாபம் தேட முனைகிறது.

நாட்டின் ஆட்சியைக் கையிலே வைத்துக் கொண்டு, பல நூறு நாடுகளின் ஆதரவு, அனுசரணையோடு இயங்கிவரும் ஒரு அரசு - பல ஆயிரம் கோடிரூபா வரை ஏற்பட்ட ஒரு அழிவுக்காக ஒதுக்கியநிதி வெறும ஏழு கோடி ரூபா.

இது அம்பாறை மாவட்டத்தில் மட்டும் ஏற்பட்ட அழிவுகளைக் கூட சீர்செய்யப் போதுமானதன்று. இந்த நிலையில் அழிவுகள் ஏற்பட்ட மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு கோடி ரூபா எனும் விகிதத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது, யானைப் பசிக்கு சோளப் பொரி போன்றதே. சர்வதேசமும், அரசும் நிறைந்த மனதுடன் உதவிகளைப் புரியும் என எதிர்பார்த்திருந்த விடுதலைப்புலிகளின் தலைமை அரசின் நியாயமற்ற போக்கை அறிந்து, முப்பது கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதனுடன் ஒப்பிடும் போது அரசு ஒதுக்கிய ஏழு கோடி ரூபாவை கருததில் எடுக்க வேண்டிய அவசியமில்லை.

**இதுவரை காலமும் இலங்கை பூமியதிர்ச்சி ஏற்படும் எல்லைகளுக்கு அப்பாலேயே அமைந்துள்ளதாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் தற்போது சுமாத்திராத் தீவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் விளைவு கொழும்பிலே வெள்ளவத்தையிலும் உணரப்பட்டுள்ளது. இது எதிர் காலத்திலே இலங்கை பூமியதிர்சசி அபாயத்துக்கு உள்ளாகும் நிலைககு ஆரம்ப அறிகுறியாகும். இவ்வாறானதொரு நிலை - இலங்கைக்கு ஏற்படுதற்குக் காரணம் திட்டமிடல்களற்ற முறையிலே உரிய ஆய்வு முடிவுகள் எதுமின்றி அடுக்கடுக்காக மிகவிரைவாகக் கட்டப்படும் தொடர்மாடிகளே எனப் புவியியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அத்துடன் மகாவலி கங்கையை மறித்துக் கட்டப்பட்டுள்ள ஒன்பது பாரிய நீர்த்தேக்கங்களும் இந்த அழிவை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையலாம் எனவும் கருதப்படுகிறது.**

ஆனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களை புள்ளி விபரங்கள் ரீதியாக - சர்வதேசம் முன் சமர்ப்பித்து பல கோடி ரூபாவை பெறும் அந்தப பணத்தின் பெரும் பகுதியை தென்னிலங்கையில் செலவிட்டு, சிறியளவு தொகையை தமிழர் பகுதிகளுக்கு கிள்ளித் தெளிக்கும். இது வெறும் கண்துடைப்பாகவே இருக்கும். இதனாலேயே இயற்கை அனர்த்த நிவாரணப் பணிககான உயர் குழுவில் விடுதலைப் புலிகளுக்கு முக்கிய இடம் வழங் கப்படாமல், பத்தோடு பதினொன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். உண் மையிலேயே அரசும் - விடுதலைப் புலிகளும் மட்டுமே இந்த உயர் குழுவிலே அங்கம் வகித்து, தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபட வேண்டும். அப்போது தான் முழுமையாக இந்த அழிவிலிருந்து மீள முடியும்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது, தற்போது தான் இடைக் கால நிர்வாகத்தின் தேவை அவசியமாகவும், அவசரமாகவும் தேவைப் படுகிறது. சர்வதேச நாடுகள் வழங்கும் நிதிகளை உரிமையுடன் பெறவும், வேறு உதவிகளை உரிமையுடன் கேட்கவும் இடைக்கால நிர்வாகம் என்பது மிகமிக அவசியமானது.

அரசும் இந்த நிலையை உணர்ந்து சமாதானப் பேச்சு வார்த்தைகளின் மூலம் மிகவும் அவசரமாக இடைக்கால நிர்வாக அலகு ஒன்றை வடக்கு - கிழக்கிலே உருவாக்கி அதனை விடுதலைப் புலிகள் வசம் வழங்கவேண்டும்.

ஏனெனில் பொது மக்கள், பொது அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள், பல்கலைக்கழகம், பாடசாலை மாணவர்கள் என சிவில் தரப்பினர் வீடு வீடாகச் சென்று சேகரித்த பொருட்களை தமிழர் தாயகப் பகுதிக்கு அனுப்பும் போது, அதனையே இடைவழியில் இராணுவத்தினரும், சிங்கள அரச அதிகாரிகளும், விசமிகளும் இணைந்து பறித்தெடுத்தமையும், விநியோகங்களைத் தடுத்தமையும் திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட பகுதிகளிலே நடைபெற்றுள்ளது. இது

மான விடயம். விடுதலைப்புலிகள் மக்கள் நலனில் அக்கறை கொண்டு அதற்காகவே உழைப்பார்கள் என்பதை அண்மைய நாட்கள் உலக அரசுக்குத் தெரியப்படுத்தி வருகின்றன.

புலிகள் வரி வசூலிக்கிறார்கள். மக்களிடம் கப்பம் வாங்குகிறார்கள் என்றெல்லாம் காட்டுக்கத்தல் போட்டவர்கள் இனி எதுவுமே பேச முடியாது. ஏனெனில் மக்களிடமிருந்து பெற்ற பணத்தின் பெரும்பகுதி மக்களுக்கே பங்கிடப்படவுள்ளது. அன்று வரியை அறவிட்டு, பணத்தைச் சேமித்து வைத்திருந்தமையினாலேயே இன்று மக்கள் பணிக்காக செலவிடப்படக் கூடியதாகவுள்ளது. இனி எவருமே புலிகள் வரி அறவிடும் விடயம் தொடர்பாகப் பேச முடியாது. இனவாத கூச்சலிட்டு என்றுமே புலிகளுக்கு எதிராக கருதது வெளியிட்டு வந்த ஜே.வி.பியினருக்கும் தேசியத் தலைவரின் நிதி ஒதுக்கிடு சாட்டையடியாக விழுந்துள்ளது. பலாலி வரை வந்தவர்கள் குடாநாட்டில் மக்கள் படும் பாட்டை அறிய முடியாத வலுவற்றவர்களாக பலாலியிலேயே தங்கி விட்டார்கள். அதனால் யாழ். குடாநாட்டு மக்களின் எதிர்பபை நேரடியாக உணரவில்லை. மீறி வந்த பிரதமர் - தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பை எண்ணி தன்னிலையை உணர்ந்திருப்பார். சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிப்பதன் கேட்டின விளைவே இந்த எதிர்ப்பு அலை என்பதையும் அறிந்திருப்பார்.

உண்மையிலேயே இனியொரு போரை எதிர்கொள்ளும் திறன் நாட்டில் இல்லை. எனவே சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குறுகிய கால இடைவெளிக்குள் மிகவேகமாக ஆரம்பிக்க வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்புக்களின போது பரஸ்பரஉறவுகளை அரசியற் தலைவர்கள் பேணிக் கொள்ளும் இந்தச் சந்தர்ப்பத்திலேயே சமாதானப் பேச்சும் மற்றும் தீர்வு தொடர்பாகவும் சாதகமான முடிவை எட்டமுடியும். இந்த வேளையை நழுவவிடக் கூடாது. தமிழ் - முஸ்லிம் உறவுகளும் இந்த வேளையில் இறுக்கமாகியுள்ளமையை உணரக்கூடியதாக வுள்ளது. முஸ்லீம் மக்களும் தம் மீது யார் அதிகமான அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பமாக இந்த இயற்கை அனர்த்தம் அமைந்துள்ளது. ஆபத்திலேயே நண்பனை அறியலாம் என்பதுபோல, துயருற்று நிற்கும் முஸ்லீம் மக்களுக்கும் தோள்கொடுக்கத் தமிழ்த் தேசியத் தலைமை தயாராகவுள்ள சேதி முஸ்லீம்களின் நலனில் அவர்கள் கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்தி நிற்கிறது. இனி வேறுபாடுகளைக் களைந்து தமிழ் பேசும் மக்கள் எனும் ரீதியிலே ஒன்றுபட வேண்டிய தருணம் இது.

போர் பற்றிய பீதியுணர்வு இருந்த மக்களுக்கு இனிப்போர் ஏற்படாது எனும் ஒரு நம்பிக்கை பிறந்துள்ளது. எந்தத் துன்பத்திலும் சிறு இன்பமுண்டு என்பார்கள். அது போலவே "சுனாமி" அலையின் அழிவும் போரைப் பின்தள்ளி இன ஐக்கியத்தை மேம்படுத்தியுள்ளதுடன், சிதைவடைந்துள்ள நாட்டைச சீர்படுத்துவதற்காக அனைத்துத் தரப்பினரையும் ஒன்று பட வைத்துள்ளது. நீண்ட காலங்கள் தேவைப்படும் சீர்படுத்தல் பணிக்கு

காக மிக விரைவாகக் கட்டப்படும் தொடர்மாடிகளே எனப் புவியியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அத்துடன் மகாவலி கங்கையை மறித்துக் கட்டப்பட்டுள்ள ஒன்பது பாரிய நீர்த்தேக்கங்களும் இந்த அழிவை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையலாம் எனவும் கருதப்படுகிறது.

ஏனெனில் இந்தியாவின் குஜராத்திலே ஏற்பட்ட பூகம்பத்துக்குக் காரணமாக நர்மதா நதியை மறித்துக் கட்டப்பட்ட நீர்த்தேக்கமே காரணமெனவும் ஒரு சந்தேகம் அப்போது விஞ்ஞானிகளால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே உரிய முறையிலான விஞ்ஞான ஆய்வுகள் எதுவுமின்றித் தொடர்மாடிகளை அமைப்பதானது, பாரிய அழிவுகளை எதிர்காலத்திலே ஏற்படுத்திவிடும் வாய்ப்புக்கள் உள்ளது. இயற்கையை அணை போட்டுத் தடுக்க முற்படின் அது சீற்றம் கொண்டால் அந்தச் சீற்றத்தை எந்தச் சக்தியாலுமே தடுதது நிறுத்த முடியாது. சிந்திப்பதற்கே கால அவகாசமின்றிச் சில நிமிட நேரங்களிலேயே அனைத்தையும் தகர்த்து விடும் ஆற்றல் இயற்கைக்குள்ளது. எனவே இயற்கையைக் கட்டுப்படுத்த நினைப்பதென்பது முட்டாள் தனமான காரியமே.

தற்போது நடைபெற்று முடிந்த கடல்கோள் என்பது வரலாற்றைப் பொறுத்தவரையிலே புதிய விடய

கொண்டு செல்வது என்பது நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத விடயம். அள்ளித் தந்த கடலே அள்ளிக் கொண்டு போனது. சும்மா கிடந்த கடல் பொங்குமெனக் கனவில் கூடக் கருதவில்லை. இதனாலேயே முதலாவது அலையின் ஓசையைக் கேட்கும் அனேக மக்கள் அச்சம் கொள்ளவில்லை. வந்து வாரிக் கொண்டு சென்றபின்புதான் அலையின் வேகத்தை உணர்ந்து கொண்டனர். இதனாலேயே அனேக உயிரிழப்புக்கள் அநியாயமாக ஏற்பட்டுள்ளது.

இது சுனாமியின் தாக்கத்துக்கு ஆளாகி மரணித்த உறவுகளை இழந்து தவிப்போருக்கு அவசியமாகத் தேவைப்படுவது ஆறுதல். இதையே அனைவரும் வழங்க வேண்டும். வெறும் புதினங்களை அவர்களிடமிருந்து கேட்டறிவதை விடுத்து, அவர்களின் பாதிப்பை உணர்ந்து பக்கத்திலே துணையிருநது ஆறுதல் கூறவேண்டும். இதன் மூலம் உருவாகப்போகும் மன நிலை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ள முடியும். அத்துடன் மருத்துவ வசதிகளை விஸ்தரிப்பதன் மூலமாகவும், தொற்றுநோய் அபாயங்களைத் தடுத்து இனி ஏற்படும் அநியாய இழப்புக்களைத் தடுக்க முடியும். இதற்காக அனைதது்த் தரப்பினரும் ஒன்றாகக் கைகோர்த்து உழைக்கவேண்டும்.

## ஜனவரி - 04

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

- 1792 - உலகின் முதலாவது கால் நடை மருத்துவக் கல்லூரி பிரிட்டனில் முதன் முதலாகத் துவக்கப்பட்ட தினம் இன்றாகும்.
- 1832 - அரச ஆணைகளைத் தாங்கிவரும் அரச வர்த்தமானிப் பத்திரிகையின் பிறந்ததினம் இன்றாகும். செண் ஜோர்ஜ் கெஸட்டின் முதல் இதழ் இன்றுதான் வெளியா கியது.
- 1885 - குடல் வளரி அறுவைச் சிகிச்சை முதன் முதலில் செய்யப் பட்டது இன்றாகும். அயோவாவில் தேவன் போர்ட் என்னுமிடத்தில் டொக்டர் வில்லியம் வெஸ்ட் கிராண்ட் என்பவர் ஒரு பெண்மணிக்கு இந்த அறுவைச் சிகிச்சையைச் செய்தார். இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பின் அந்தப் பெண்மணி முழுமையாகக் குணமடைந்து மேலும் 64 வருடங்கள் உயிர் வாழ்ந்தார்.
- 1917- அணுகுண்டு வீசி ஜப்பானின் நகரங்களை அழித்த அமெரிக்காவின் அப்போதைய அதிபராக இருந்த உட்ரோ வில்சன் "போர் மனித நாகரீகத்துக்கு இழைக்கப்படும் பெரும் குற்றம். எமது தேசத்தைப் பொறுத்த வரை போர் என்பதற்கே இடமில்லை" என அறிக்கை விடுத்தார்.
- 1920 - பாம்புக் கடிக்கு நச்சுமுறி மருந்தைக் கண்டுபிடித்தவரும், பிரிட் டனின் புகழ்பெற்ற மருந்தியலாளருமான தோமஸ் றிச்சர்ட் ப்ரேஸர் என்பவர் இன்று மரணமடைந்தார்.
- 1948 - பர்மா தேசம் குடியரசாக மலர்ந்ததினம் இன்றாகும். கொமன்வெல்த்துடன் எதுவிதமான தொடர்புமில்லாத தனிக் குடியரசாகப் பர்மா அறிவிக்கப்பட்டது. அனைத்துத் தொழில்துறைகளும் அரசுடைமையாக்கப்பட்டன.
- 1972 - லண்டன் ஓல்ட் பெயில் நீதிமன்றத்தில் முதன் முதலாக ஒரு பெண் நீதிபதி பதவியேற்றார். றோஸ் ஹெயில் பிரான் என்பது அவரது பெயராகும்.
- 1984 - புருனி தேசம் விடுதலை அடைந்த நாள் இன்றாகும்.
- அவுஸ்ரேலியா. பர்மா ஆகிய நாடுகளது சுதந்திரதினம் இன்றாகும்.

தொகுப்பு - சந்துரு

# நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போருக்கு இன்றுமுதல் உலர் உணவு நிவாரணம் வழங்கல்

## அரச அதிபர் கிராம அலுவலருக்கு பணிப்பு

சுனாமி கடற் கொந்தளிப்பினால் இடம்பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்போருக்கும் இன்று முதல் உலர் உணவு வழங்கப்படும் என யாழ் அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

உலக உணவு நிறுவனம் வழங்கிய உணவுப் பொதிகளிலிருந்து ஒருவருக்கு 400கிராம் அரிசி அல்லது மா அல்லது இரண்டும் 60கிராம் பருப்பு, 30கிராம் சீனி என்ற ரீதியில் வழங்கப்படவுள்ளது.

கரவெட்டிப் பிரதேசசபை மண்டபத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விசேட செயலணிக் கூட்டத்தில் வடமராட்சிகிழக்கு, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பிரதேச செயலர்களுக்கு அரச அதிபர் இந்த பணிப்புரையை விடுத்தார். கடலனர்த்தத்தால் இடம் பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியிருப்போருக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை என்ற புகார் காரணமாகவே இப்பணிப்புரை வழங்கப்பட்டது.






யுனிசெவ் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல் பெனாமி பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் நிவாரண பணிகளை பார்வையிடுகிறார்.

நேற்று கரவெட்டிப் பிரதேச சபை மண்டபத்தில் அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், வடமராட்சிப் பகுதியின் 3 பிரதேச செயலர்கள், கடற்றொழிலாளர் சமாசப் பிரதிநிதி சூரியகுமார், யாழ். மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், அரசசார்பற்ற நிறுவன்ங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மற்றும் இடம்பெயர்ந்த முகாம்களில் தங்கியிருப்போருக்கு உரிய நேரத்தில் மூன்று நேரவேளையும் உணவுகளை வழங்குமாறும் கோதுமை மா தட்டுப்பாடு காணப்படுவதால் ஒரு நேரம் பாணும் மற்றைய நேரம் வேறு உணவுகளும் வழங்குமாறும் தெரிவித்த அரச அதிபர் -

நலன்புரி நிலையங்களில் மலசலகூட வசதிகள் மிகக் குறைவாக இருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளதால் உடனடியாக தற்காலிக மலசலகூடங்கள் அமைக கவும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் முகாம் சுத்திகரிப்பிற்காக வேறு பிரதேச சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கு மேலதிக கொடுபனவு கொடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (14,122)

## மாணவர்களின் கவனத்துக்கு

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தில் அவசர மீட்புப் பணியும், துப்புரவுப் பணியும் மேற்கொள்ளப்படவேண்டியிருப்பதால் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், உயர் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், கல்வியியற்கல்லூரி மாணவர்கள் அனைவரையும் இன்று காலை 8.00 மணிக்கு சர்வதேச மாணவர் பேரவைக்கு சமுகமளிக்குமாறு சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பாதிக்கப்பட்ட மக்களின் நிலை யாழ்.செயலகத்தில் கூட்டம்!

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் யாழ்.குடாநாட்டில் பாதிக்கப்பட்ட மக்களின் தற்போதய நிலைமைகள், அவர்களுக்கு எவ்வாறு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பது தொடர்பாக - யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பாதிக்கப்பட்ட மக்கள், தமது பாதிபபில் இருந்து மீள்வதற்கு அவர்களுக்கு செய்ய் வேண்டிய செயற்திட்டங்கள், அவர்களின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர், யாழ். மாவட்ட இராணுவத்தளபதி, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகப் பொறுப்பேற்ற கே.கணேஸ் யாழ்.மாவட்ட உயர் அதிகாரிகளை சந்தித்தது இதுதான் முதற்றடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ விடியோ பிரதிகளின் வாடகையில் மேலதிகமாக பத்துரூபா அறவீடு

சுனாமி கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்குடன் விடியோ பிரதி வாடகைக்குப் பெறுவோர் ஒவ்வொன்றுக்கும் மேலதிகமாக 10 ரூபா செலுத்தி பிரதியினை வாடகைக்குப பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட திரைப்பட வழங்குனர்கர் சங்கம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

சுனாமி கடற் கொந்தளிப்பினால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவும் நோக்குடனேயே இந்த நிதி சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

திரையரங்குகளில் ரிக்கெட் விற்பனை செய்யும்போது பத்து ரூபாவினை மேலதிகமாக சேகரிக்குமாறும், வீடியோ கடை உரிமையாளர்கள் தாம் வழங்கும் ஒவ்வொரு வீடியோ பிரதிகளுக்கும் 10 ரூபாவினை சேகரிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வரை. இந்த நிதியினைச் சேகரித்து சங்கத்தின் பொருளாளரிடம் கையளிக்குமாறு வீடியோ வழங்குனர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (12)

# நலன்புரி நிலையங்களை மாவை எம்.பி.பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களைக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார். அத்துடன் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும சென்று பார்வையிட்டு வருகின்றார்.

பருத்தித்துறை, குடத்தனை, மணற்காடு ஆகிய இடங்களுக்கு நேற்றுமுன்தினம் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினார். இனிவரும் காலங்களில் கடற்கரைகளில் குடியிருப்புக்களை அமைக்க வேண்டாமெனவும் கடற்கரையில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலே மக்கள் குடியிருப்புக்கள் அமைக்கவேண்டுமெனவும்

கடற்கரைப் பிரதேசங்களில் மீனவர்களுக்குச் சொந்தமான காணிகளில் அவர்களது கடற்றொழில் உபகரணங்களைப் பாதுகாப்பதற்கான அமைவிடங்களையே அமைக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். இதேவேளை நலன்புரி நிலையங்களுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகளையும் கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி நேற்று முன்தினம் ஒரு தொகுதி மருந்துப்பொருட்களை மந்திகை அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் கையளித்ததுடன் நோயாளர்களையும் பார்வையிட்டு நலன் விசாரித்தார். (91)

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கான ...

T A 16-2 இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3.I 30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம் 15/2003
70140 - 9x1320 - 8x1560 - 94500

அ.பொ.நி. சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
1.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
109140 - 9x1320 - 8x1560 - 133500

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 70140 | 5845 | 109140 | 9095 |
| 2 | 71460 | 5955 | 110460 | 9205 |
| 3 | 72780 | 6065 | 111780 | 9315 |
| 4 | 74100 | 6175 | 113100 | 9425 |
| 5 | 75420 | 6285 | 114420 | 9535 |
| 6 | 76740 | 6395 | 115740 | 9645 |
| 7 | 78060 | 6505 | 117060 | 9755 |
| 8 | 79380 | 6615 | 118380 | 9865 |
| 9 | 80700 | 6725 | 119700 | 9975 |
| 10 | 82020 | 6835 | 121020 | 10085 |
| 11 | 83580 | 6965 | 122580 | 10215 |
| 12 | 85140 | 7095 | 124140 | 10345 |
| 13 | 86700 | 7225 | 125700 | 10475 |
| 14 | 88260 | 7355 | 127260 | 10605 |
| 15 | 89820 | 7485 | 128820 | 10735 |
| 16 | 91380 | 7615 | 113080 | 10865 |
| 17 | 92940 | 7745 | 131940 | 10995 |
| 18 | 94500 | 7875 | 133500 | 11125 |

T A 16-1 இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3.II 30.11.2004 வரை சம்பள அளவுத்திட்டம் 15/2003
60900 - 14x1320 - 6x1560 - 88740

அ.பொ.நி. சுற்றறிக்கை 09/2004 - 27.12.2004
1.12.2004 தொடக்கம் சம்பள அளவுத்திட்டம்
99900 - 14x1320 - 6x1560 - 127740

| | | | | |
|---|---|---|---|---|
| | 60900 | 5075 | 99900 | 8325 |
| 1 | 62220 | 5185 | 101220 | 8435 |
| 2 | 63540 | 5295 | 102540 | 8545 |
| 3 | 64860 | 5405 | 103860 | 8655 |
| [illegible] | 66180 | 5515 | 105180 | 8765 |
| 5 | 67500 | 5625 | 106500 | 8875 |
| 6 | 68820 | 5735 | 107820 | 8985 |
| 7 | 70140 | 5845 | 109140 | 9095 |
| 8 | 71460 | 5955 | 110460 | 9205 |
| 9 | 72780 | 6065 | 111780 | 9315 |
| 10 | 74100 | 6175 | 113100 | 9425 |
| 11 | 75420 | 6285 | 114420 | 9535 |
| 12 | 76740 | 6395 | 115740 | 9645 |
| 13 | 78060 | 6505 | 117060 | 9755 |
| 14 | 79380 | 6615 | 118380 | 9865 |
| 15 | 80940 | 6745 | 119940 | 9995 |
| 16 | 82500 | 6875 | 121500 | 10125 |
| 17 | 84060 | 7005 | 123060 | 10255 |
| 18 | 85620 | 7135 | 124620 | 10385 |
| 19 | 87180 | 7265 | 126180 | 10515 |
| 20 | 88740 | 7395 | 127740 | 10645 |

நாதன்ஸ் யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)
ANACONDA - 2 (ஆங்கிலப்படம்)
காட்சி நேரம் - 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
விரைவில்: ஈழத் திருநாட்டின் தாவடியின் மைந்தன் ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, விஜயகுமார் நடித்த
ராமகிருஷ்ணா
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

நிரஞ்சனாஸ் சங்கானை
அஜித் [இருவேடம்] பூஜா நடித்த
அட்டகாசம் (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
AIRFORCE I
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
விஜயகாந், லயா, சீதா, சரத்பாபு, ராதாரவி நடித்த
கஜேந்திரா (ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த

ஜெய் சூர்யா
கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி.ஸ்ரீ சுந்தரராசா சுமதி அவர்களின் அன்புத் தாயாரும், களபூமி, காரைநகரை வதிவிடமாகக் கொண்டவருமான

திருமதி.பாலசுப்பிரமணியம் ஈஸ்வரி

அவர்களின் மறைவினாலும், எமது கல்லூரி ஆசிரியர் திரு.பொ.சிவானந்தராசா அவர்களின் அன்புமிகு சகோதரியாகிய

திருமதி.ஆனந்தராசா இந்திராமலர்

அவர்களின் அகால மறைவினாலும் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருடன் எமது கல்லூரிச் சமூகமும், துயரைப் பகிர்ந்து கொள்கின்றது.

யாழ்.மத்திய கல்லூரி,
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

[C/3593]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுனாமியில் உயிரிழந்தோருக்கு நோர்வே தலைநகரில் அஞ்சலி!





(ஒஸ்லோ)


சுனாமி அனர்த்தத்தினால் காவுகொள்ளப்பட்ட மக்களை நினைவு கூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு, துயர் பகிர்வதற்கான ஒன்றுகூடல் நேற்றுமுன் தினம் மாலை 4 மணிக்கு ஒஸ்லோவில் நடைபெற்றது.

தமிழர் ஒருங்கிணைப்பு குழு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழர் வள ஆலோசனை மையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்த ஒன்றுகூடல் அன்னை பூபதி தமிழ் கலைக்கூட றொம்மன் வளாகத்தில் இடம்பெற்றது. நோர்வேஜிய மக்கள் உட்பட பெருந்திரளான தமிழ் மக்கள் இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்டனர். இந்தத் துயர்பகிர்வு ஒன்றுகூடலில் நோர்வேயின் பிரதான அரசியற் கட்சிகளான தொழிலாளர் கட்சித் தலைவர் ஜென் ஸ்தொல்தன்பேர்க், சோசலிச இடதுசாரி கட்சித் தலைவர் கிறிஸ்ரின் கர்ல்வோர்சன், இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வே நீதி- பொலிஸ் அமைச்சர் ஜனார் டோரும் மற்றும் ஒஸ்லோ நகரசபைத் தலைவர் ஆர்லிங் லா ஆகியோர் நோர்வே அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டிருந்தனர்.

சுனாமி அனர்த்தத்தால் பலியாகிப் போன மக்களை நினைவு கூர்ந்த நோர்வே அரச பிரதிநிதிகள், உறவுகளை இழந்து தவிக்கும் தமிழ் மக்களின் ஆழ்ந்த துயரில் உணர்வோடு பங்கெடுத்துக் கொள்வதாகத் தெரிவித்தனர். அத்தோடு இயற்கை பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேச மக்களின் புனர்வாழ்வு, மீள்கட்டமைப்பு பணிகளுக்கு நோர்வே தன்னாலான உதவிகளை வழங்கும் என்றும் உறுதி கூறினர்.

இந்தத் துயர்பகிர்வு ஒன்றுகூடலில், பேரலையின் கோரத்தினால் உயிர் நீத்த மக்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக சுடரேற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து நோர்வே அரச பிரதிநிதிகளின் உணர்வுபகிர்வும், தமிழ் சர்வமத குருமார் மற்றும் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் உணர்வுப் பகிர்வும் இடம்பெற்றன. என்பது குறிப்பிடத்தக்கது.

# கொபி அனான், கொலின்பவல் இலங்கைக்கு வருகின்றனர்!



(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு அடுதத இரண்டு வாரங்களில் சர்வதேச சமூகத்தின் மூன்று தலைவர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.

ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின்பவல், உலக வங்கி தலைவர் ஜேம்ஸ் வுல்பென்சன் ஆகியோரே இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மஹிந்தராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்திக்கத்திட்டமிட்டுள்ளனர்.

எதிர்வரும் வியாழக்கிழமை இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள ஆசியான் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றபின்னர் கொபி அனான் இலங்கைக்கு வருவார் எனத் தெரியவருகிறது.

## இணையத் தளத்தில் பார்வையிடலாம்

பயிற்றப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனங்கள் குறித்த விபரங்களை WWW.tresury.Cov.lk என்ற இணையத் தளத்தில் பார்வையிடலாம் என்று நிதியமைச்சின் முகாமைத்துவத் திணைக்களம் அறிவித்தது.

# மட்டக்களப்பு பகுதிக்கு இந்தியத் தூதுவர் விஜயம்

(மட்டக்களப்பு)

இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்செய்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டார்.

நேற்று மட்டக்களப்புக்குச் சென்ற இந்தியத் தூதுவர் மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

விடுதலைப் புலிகள் சார்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவில் அங்கம் வகிக்கும மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோரையும் நிருபமா ராவ் சந்தித்தார்.

இதன்போது இந்த மாவட்டத்தின் அழிவுகளை நிவர்த்திசெய்ய நீண்டகாலத்திட்டம் மற்றும் இடைக்காலத்திட்டம் என இரண்டு திட்டங்கள் வகுக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

அரச நிர்வாகப் பிரிவு, விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரிவு என இரண்டு நிர்வாகப் பிரிவு இருப்பதால், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கான உதவிகள் அவர்களூடாகவே வழங்கப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

எனினும் எந்த உதவி என்றாலும்சரி அரசாங்கத்தின் ஊடாகவே செய்யப்படும் என இந்தியத் தூதுவர் பதிலளித்தார்.

காத்தான்குடி, நாவலடி, கல்லடி போன்ற பகுதிகளையும் இந்தியத் தூதுவர் நேரில் சென்று பார்வையிட்டார்.

## அமெரிக்கப் படைகள்...

இந்த விமானத்தில் ஒரு பிளக் ஹோக் ஹெலிகொப்டரும் கொண்டு வரப்பட்டது. இத்துடன் இந்த விமானத்தில் சேதமுற்ற கட்டடங்களை அகற்றும் சிறிய இயந்திரங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதேவேளை, சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவுவதற்கென 98 வெளிநாட்டு விமானங்கள் கொழும்புக்கு வந்துள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய அவசர அத்தியாவசிய மத்திய நிலையம் தெரிவித்தது.

நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்வதற்காக அமெரிக்காவின் ஆறு உலங்கு வானூர்திகளைத் தாங்கிய பாரிய விமானம் ஒன்று இலங்கைக்கு வரவுள்ளதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கரையில் தரையிறங்கக்கூடிய இரண்டு விமானங்களை இத்தாலி வழங்கியுள்ளது. இந்த இரு விமானங்களும் இன்னும் சில தினங்களில் கொழும்பை வந்தடையும் என்று விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை பங்காளாதேஷ் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் வழங்கிய ஒன்பது விமானங்கள் விமானப்படையினருடன் இணைந்து நிவாரணப் பணியில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## டிக்ஸிற்...

மாரடைப்பு ஏற்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட டிக்ஸிற் நேற்றுக்காலை 6.30 மணியளவில் மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

ஜோதீந்திரநாத் டிக்ஸிற் (வயது 68) இந்தியாவின் மூத்த ராஜதந்திரிகளில் ஒருவராவார். இந்தியாவின் வெளியுறவுச் செயலராகப் பதவி வகித்த இவர், 1971 இல் பங்களாதேஷுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் இவர் இலங்கைக்கான தூதுவராக பணியாற்றியபோது 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் மற்றும் இந்தியப் படைகளின் இலங்கை வருகை ஆகியவற்றில் டிக்ஸிற்றின் பங்கு மிக முக்கியமாகவே இருந்தது.

ஓய்வு பெற்ற பின்னர் Assignnent - Colombo என்ற நூலில் தமது இலங்கை அனுபவங்களை விபரித்திருந்தார். இவர் இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான ஆலோசகராக இருந்து வந்தார்.

கடந்த ஆண்டு இந்தியாவில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியைப் பிடித்ததும் இவர் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

ஜே.என்.டிக்ஸிற்றின் இறுதிச் சடங்கு நாளை நடைபெறும்.

# முல்லைத்தீவு...

முன்னதாக நேற்றுக்காலை 8.45 மணியளவில் இலங்கை விமானப் படையின் ஹெலிகொப்டர்மூலம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய பெலாமியும் அவரது குழுவினரும் - கடற்கொந்தளிப்பில் அகப்பட்டுக் காப்பாற்றப்பட்டு கிளிநொச்சியில் தங்க வைக்கப்பட்டுள்ள செந்தளிர் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த 38 சிறுவர்களுடன் கலந்துரையாடினர்.

இதன்பின்னர் தமிழீழ காவல் துறையினரின் பாதுகாப்புடன் கடற்கொந்தளிப்பால் அழிவுக்குள்ளான முல்லைத்தீவு கரையோரப் பிரதேசங்களைச் சென்று பார்வையிட்டனர்.

இதன்பின்னர் இந்தப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து முல்லைததீவு வித்தியாணந்தாக் கல்லூரியில் தங்கியுள்ள மக்களையும் இந்தக் குழுவினர் சென்று பார்வையிட்டனர். பின்னர் கிளிநொச்சிக்கு வந்த இவர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் றெஜியைச் சந்தித்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் இந்தக் குழுவினர் கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் பிற்பகல் 1 மணியளவில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த பெலாமி -

கடந்த வாரம் தென்னாசியப பிராந்தியத்தில் ஏற்பட்ட சுனாமி பேரலையால் பெருமளவு சிறுவர்களும், பெண்களுமே பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட சகல பிரதேசங்களுக்கும் யுனிசெவ் உதவி புரியும்.

அத்துடன் முல்லைத்தீவுக் கரையோரம் பெரிதும் அழிவுக்குள்ளாகியுள்ளது. இதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்படைந்த நிலையில் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது.

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதேசங்களுக்கான உதவிகளை செயலணிக் குழுக்கள் மூலமாக யுனிசெவ் விநியோகிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்பின்னர் இந்தக் குழுவினர் நேற்று மாலையே கொழும்பு திரும்பினர்.

## உதவிப் பணிகளில்...

போக்குவரத்தை சீராக்கும் வகையில் கட்டட இடிபாடுகளை எமது கனரக வாகனங்கள் அகற்றி வருகின்றன.

கல்முனையில் முஸ்லிம்களுடன் இணைந்து மீட்பு பணிகளில் போராளிகள் ஈடுபட்டனர்.

கடற்கொந்தளிப்பில் சிக்கித் தத்தளித்த 10 இராணுவத்தினர் மீட்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட பின்பு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## புலிகளின்...

புலிகளின் தாயகப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் உதவிகள் வரவில்லை எனத் தெரிவித்தார்.

# வெளிநாட்டுப் படைகள் உதவிப் பணிகளுக்கே!

## ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உதவிப் பணிகளை மேற்கொள்ளவே வெளிநாட்டுப் படைகள் இங்கு வருவதாகவும் - இராணுவ நடவடிக்கைகளுக்காக அல்ல எனவும் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில நாளிதழொன்றுக்கு அவர் தெரிவித்துள்ளதாவது -

வெளிநாட்டுப் படைகள் இங்கு வருவது பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கேயாகும். இவர்கள் இலங்கை அரசுடனும் தேசிய நடவடிக்கை நிலையத்துடனும் இணைந்து தமது நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிக்கும் வகையில் 1500 அமெரிக்க மரைன் படையினர் வருவதை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மேலும் ஒரு பெண் நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி இயற்கை அனர்த்தத்தல் காயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் நேற்று மதியம் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமடைந்தார்.

மருதங்கேணி தாளையடியைச் சேர்ந்த 55 வயதான பாக்கியநாதர் லூத்துநாயகி என்பவரே மரணமடைந்தவராவார்.

கலை, வர்த்தகப் பிரிவுகள்
A/L - 2007
DMI
யாழ். நகர்
ஜனவரி - 8
காலை 8 மணி
C/3504

DM
வணிக, முகாமைத்துவப் பட்டப்படிப்புக் கல்லூரி
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)
A/L 2007
கலை வர்த்தகம்
ஆரம்பம் :
09 ஜனவரி 2005 – ஞாயிறு காலை 8.00 மணி
பொருளியல் – வரதராஜன்
கணக்கீடு – பாலவாசன்
வணிகக்கல்வி – உமாகாந்த்
தமிழ் – நாக. தமிழீந்திரன்
இந்துநாகரீகம் – ஸ்ரீஸ்
அளவையியல் – சுதன்
புவியியல் – குமரன்
ஆங்கிலம் – நிஷாந்தன்
C/3594

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.